மாலை 46 மணி 6 ஜூன் 2004 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு


## காணக் கண்கோடி வேண்டும்
## காஞ்சி கருடசேவை

**சர்வரோக நிவாரணி வைத்தீஸ்வரர் வழங்கும் மருந்து உருண்டை**



**மகப்பேறு வேண்டுமா? முக்குளநீர் ஆடுவீர்!**

**நம் குடும்பமே சுபிட்சம் பெற பார்த்தசாரதியைக் கைதொழுவோம்!**





சரபோஜி மன்னர்களுக்கு நெய்தோம்
தேசிய விருது பெற்றோம்.

NATIONAL AWARD
MASTER WEAVERS

வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பணம்

தஞ்சை சரபோஜி அரசகுடும்பத்தை அலங்கரித்த 'கோடலி கருப்பூர்' நெசவுத்திறனுக்கு புத்துயிரூட்டிய போத்தீஸிற்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
சென்னை ❖ திருநெல்வேலி ❖ ஸ்ரீவில்லிபுத்தூர்



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண – வைகாசி
மாலை–46 மணி –6 ஜூன் 2004

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

ஒப்பேதும் இல்லாத குன்றை முனிவர் எனப் போற்றப்படும் சேக்கிழார் பெருமான் பிறந்த குன்றத்தூரில் அவருடைய குருபூசை விழாவை ஆண்டுதோறும் நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மிகச் சிறப்பாகக் கொண்டாடிவருவது நீங்கள் அனைவரும் அறிந்துள்ள ஒன்றாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற இருபதாம் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தரும் பெரும்பேறு எனக்குக் கிடைத்து "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்பதாக நான் பெரிதும் அகம் மகிழ்ந்து பூரித்தேன்.

இதற்குமுன் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவிற்கும் நான் தலைமை தாங்கும் புண்ணியம் பெற்றேன் என்பதையும், அவ்விழாவில் அமரர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர்கள் பலரும் கூட கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் என்பதையும் நான் பெருமையுடன் நினைத்து மகிழ்கின்றேன்.

**"பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ"**

என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் பாடியுள்ள "சேக்கிழார் பிள்ளைத் தமிழ் நூலில்" தெய்வச் சேக்கிழாரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

ஆம்! ஆயிரம் ஆயிரம் தமிழ்ப்புலவர் பெருமக்களில் இருவரை மட்டுமே தமிழ்கூறு நல்லுலகம் தெய்வப் பாவலர்களாகக் கொண்டாடிப் போற்றி வருகின்றது.

அவர்களில் முதல்வர் "தெய்வப் புலவர்" திருவள்ளுவநாயனார். மற்றவர் 63நாயன்மார்களை ஞாலம் கொண்டாடத் "திருத்தொண்டர் புராணம்" எனும் பெரிய புராணத்தைப் பாடியருளிய நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

"காவியங்கள் பல திறத்தன. அவைகளுள் சிலவற்றில் உலகைக் காணலாம். சிலவற்றில் உயிரைக் காணலாம். சிலவற்றில் கடவுளைக் காணலாம். மூன்றையும் ஒருங்கு காட்டும் காவியங்கள் மிகச் சில. அச்சிலவற்றுள் பெரிய புராணமும் ஒன்று".

என்று போற்றுகின்றார் "தமிழ்த் தென்றல்" திரு.வி.க; **"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" "அன்பே சிவம்"** என்பதை வலியுறுத்தும் தெய்வத்தமிழ்க் காவியம் பெரியபுராணம்.

அந்நாளில் பட்டத்து யானைமேல் தெய்வச் சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் போற்றி ஏற்றித் தில்லைத் திருநகரின் நான்கு மாட வீதிகளையும் வலம் வரச் செய்து, தெய்வச் சேக்கிழார் அமர்ந்து வர அநபாயச் சோழன் தான் நின்று தன் இரு கரங்களிலும் கவரி கொண்டு வீசியும், "தொண்டர் சீர் பரவுவார்" எனப்பட்டம் வழங்கியும் தெய்வச் சேக்கிழார் பெருமானைச் சிறப்பித்தான் என சைவ சமய வரலாறு சேக்கிழார் புகழைக் கொண்டாடிப் போற்றுகின்றது.

நாமும் அநபாயச் சோழனைப் போல் நம் உள்ளமெனும் பட்டத்து யானைமேல் சேக்கிழார் பெருமானைப் போற்றி ஏற்றி, சேக்கிழார் வலியுறுத்திய அன்பு, தொண்டு எனும் இரு கவரி கொண்டு நம் வாழ்வில் செம்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்து, தெய்வச் சேக்கிழார் பெருமானுக்கு நம் நன்றிக் கடனைச் செலுத்திட வேண்டும் என இப்பொன்நாளில் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

"செல்வமலி குன்றத்தூர்
சேக்கிழார் அடி போற்றி! போற்றி!!"

அன்புடன்,

[ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.]
ஆணையர், இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறை

**ச**மய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிர்வாகம் :

திருக்கோயில்கள் அவற்றின் முக்கியத் துவம், வருமானம், அவற்றிற்குச் சொந்தமாக உள்ள சொத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு இணை ஆணையர், திருமடங்களின் நிர்வாகம் மேலும் சிறப்புற நடைபெறவும். நிர்வாகத்தை மேம் படுத்தவும் மடங்களின் வரவு - செலவு திட்டங்களைப் பரிசீலித்து ஒப்புதல் வழங்கவும் தலைமையிட இணை ஆணையரும், அவருக்கு உதவியாக மண்டல தணிக்கை அதிகாரி மற்றும் பிற

# அறநிலையத் துறை ஆற்றிவரும் அறப்பணிகள்

- திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகள் மற்றும் செயல் அலுவலர்கள் நிலை - 1 முதல் நிலை-4 ஆகிய பதவி நிலைகளில் அலுவலர்கள் அடங்கிய பிரிவு செயல்படுகின்றது.


| வ. எண் | பதவித்தரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர்கள்/செயல் அலுவலர்கள் | 6 |
| 2. | துணை ஆணையர்கள்/செயல் அலுவலர்கள் | 14 |
| 3. | உதவி ஆணையர்கள்/செயல் அலுவலர்கள் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை 1 | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை 2 | 112 |
| 6. | செயல் அலுவலர் நிலை 3 | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை 4 | 154 |
| | மொத்த எண்ணிக்கை | 629 |

செயல் அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

மேற்படி பதவித்தரங்களில் அனுமதிக்கப் பட்ட பணி எண்ணிக்கை விவரம் பின்னுள்ள அட்டவணையில் காணலாம்

**5. திருமடங்கள் நிர்வாகம் :**

திருமடங்கள் நிர்வாகம் 'ஆதீனகர்த்தர்களால்' நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும் அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 23.03.2002 அன்று அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

2003-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை (பல்வகை) எண்.124 தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 12.6.2003ல் சட்டப்பிரிவு 6(18)ல் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு. சமாதிகள் அல்லது பிருந்தாவனம் மற்றும் சமயம் சம்பந்தப்பட்டு நிறுவப்பட்ட அல்லது பராமரிக்கப்படும் நிறுவனங்கள் ஆகியவையும் அறநிறுவனங் களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

**அறங்காவலர் குழு நியமனம் :**

அ) திருக்கோயில்கள் மற்றும் ஏனைய சமய நிறுவனங்களுக்கு அறங் காவலர்கள் விதிமுறைகளின்படி நியமிக்கப்பட்டு, நிர்வாகத்தைக் கவனிக்க அனுமதிக்கப் பட்டு வருகின்றனர். அவற்றில் சில அறநிலையங்கள் பரம்பரை அறங் காவலர்களைக் கொண்டும், மற்றும் சில அறநிலையங்கள் நிர்வாகத் திட்டங்கள் அடிப்படையிலும் குறிப்பிட்ட சமுதாயத்தினர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

ஆ) பரம்பரை அறங்காவலர்கள் நிர்வகிக்கும் திருக்கோயில்கள், கட்டளைகள், மடாதிபதிகளால் நிர்வகிக்கப்படும் மடங்கள் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான வழக்குகள் உள்ள திருக்கோயில்களின் வகையில் 8633 இனங்களுக்கு பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம்

## திருக்கோயில்களின் அன்னதானத்திட்டம்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

- புறநானூறு

**"மண்ணினில் பிறந்தோர் பெறும்பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்**
**கண்ணினால் அவர்நல் விழாப் பொலிவு கண்டு ஆர்தல்**
**உண்மையாம் "**

- தெய்வச் சேக்கிழார்

"தானங்களில் சிறந்தது அன்னதானம்" என்பதை நம்முடைய சமயச் சான்றோர்களும், சமுதாயச் சான்றோர்களும் பன்னெடுங் காலமாகவே நமக்கு உணர்த்தி வந்துள்ளார்கள்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும் இனி வருங்காலத்தில் சிறப்பையும் எடுத்துக் காட்டும் இவ்வுன்னதமான திட்டத்தினை நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **23.03.02.** அன்று தொடங்கிவைத்தார்கள்.

தமிழகத்தில் இன்று 162 திருக்கோயில்களில் இம்மகத்தான திட்டம் சிறப்புடன் நடைபெற்று வருகின்றது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 1008 இலவசத் திருமணங்களை நடத்தி வைத்தார்கள்

செய்யஇயலாது. இது தவிர அறங் காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற திருக்கோயில்கள் **29770** உள்ளன.

இ) ஒவ்வொரு வருவாய் மாவட்ட அளவிலும், பதவி முறை ஒருங்கிணைப்பாளர் (உதவி ஆணையர்) மற்றும் ஐந்து அலுவலர்சாரா உறுப்பினர்கள் கொண்ட மாவட்டக்குழு மூலம் பட்டியலில் சேராத திருக் கோயில்களுக்கும், சட்டப்பிரிவு **46(i)** மற்றும் **46(ii)** ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கும், பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்ய தகுதியானோர் பட்டியல் தயார் செய்யும் அதிகாரம் கொண்டது. நியமன அதிகாரி மூன்று அறங்காவலர்களை நியமனம் செய்யவும். சட்டப் பிரிவு **46(iii)**ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய அரசுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு அனைத்துத் திருக் கோயில்களுக்கும் இரு அறங்காவலர்களை

## ஆலயங்கள் அறச்சாலைகள்

*"கல்யாணம் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார்" என்பது பழமொழி. கல்யாணம் பண்ணிப் பார்ப்பது அவ்வளவு கஷ்டம் என்பதால் நமது முன்னோர்கள் அனுபவப் பூர்வமாக இந்தப் பழமொழியைச் சொல்லிவைத்தார்கள்.*

*"ஆலயங்கள் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமல்லாமல் அறச்சாலைகளாகவும் விளங்க வேண்டும். அப்படித்தான் நமது ஆலயங்கள் விளங்கின".*

*"ஏழைப்பெண்களுக்கு இலவசத் திருமணம் நடத்துவதைக் காட்டிலும் உயரிய அறச்செயல் வேறு ஒன்றும் இல்லை. இதை உணர்ந்துதான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் கடந்த ஆண்டு இதே திருவேற்காட்டில் 1008 திருமணங்களை அரசின் சார்பில் இந்து சமய அறநிலையத்துறை மூலம் ஏற்பாடு செய்து மிகச் சிறப்பாக நடத்தி வைத்தேன்.*

*அதைப் போலவே இந்த ஆண்டும் 1053 இலவசத் திருமணங்களை இன்றைக்குச் சீரோடும், சிறப்போடும் நடத்தி இருக்கின்றேன்."*

*- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்*
*18.06.03 அன்று இலவசத் திருமணங்களை நடத்தி வைத்து ஆற்றிய சிறப்புரையிலிருந்து.*

## ஔவையைக் கயிலைமலைக்குத் தூக்கிவிட்ட கணபதி



தேவேந்திரன் அனுப்பிய 'ஐராவதம்' யானை ஏறிக் கயிலைக்குப் புறப்பட்டார் சுந்தரர். அது கண்ட சேரமான் பெருமான் நாயனார், தம் குதிரையின் காதுகளில் 'பஞ்சாட்சரம்' ஓதி அக்குதிரையின் மேலேறிப் பறந்து கயிலைக்குப் புறப்பட்டார்.

இவ்விருவரும் கயிலை மலைக்குச் செல்வதைக் கண்டு ஔவையார் தாமும் கணபதியை நினைந்து விநாயகர் அகவலைப் பாடி வழிப்பட்டார்.

தம் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கிச் சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கயிலை சென்று சேரும் முன்பாகவே கயிலைக்குக் கொண்டு சேர்த்து விட்டார் விநாயகர்.



நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சமயநிறுவனங்களின் நில நிர்வாகம் :**

அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டிடங்கள் விபரம் :

சமய நிறுவனங்களுக்குத் சொந்தமான நிலங்கள் தமிழ் நாடு முழுமையும் 4,78,953.35 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றில் நஞ்சை, புஞ்சை மற்றும் மானாவாரி நிலங்கள் பட்டியலில் தரப்பட்டுள்ளன.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,03,205 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 22,599 கட்டிடங்களும் 33,627 கிரவுண்டு மனைப்பகுதிகளும் உள்ளன. இதில் முறையே 22,776 மற்றும் 55.225 குத்தகைதாரர்களும் உள்ளனர்.

**ஆ) வருவாய் நீதிமன்றம்**


நிலக்குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தனித்துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூர்
6. மதுரை

மேலும், மூன்று இடங்களில் அமர்வு நீதிமன்றங்கள் (Camp Court) உள்ளன

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்

வருவாய் நீதிமன்றங்களில் ரூ. 124.13 கோடி உள்ளடக்கிய மொத்தம் 33584 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 10537 வழக்குகளில் மொத்தம் ரூ. 98.96 கோடிக்கு வசூல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வசூல் உத்திரவின்படி குத்தகை தாரர்களிடமிருந்து குத்தகைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 1147 வழக்குகளில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ரூ. 25.17 கோடி குத்தகை பாக்கி குறித்த 21,900 வழக்குகள் வருவாய் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.



## முப்பெருந்தேவியர் தரிசனம்

சென்னை - பொன்னேரிப் பாதையில் மீஞ்சூருக்கு அருகில் உள்ள மேலூரில் வீற்றிருக்கும் அம்பிகை திருவுடைநாயகி அம்மை ஆவார்.

சென்னை திருவொற்றியூரில் வீற்றிருக்கும் அம்மை வடிவுடையம்மை ஆவார்.

சென்னை ஆவடி சாலையில் வடதிருமுல்லைவாயில் திருத்தலத்தில் வீற்றிருப்பவர் கொடியிடை அம்மை ஆவார்.

இம் மூன்று தேவியர் திருவுருவங்களும் ஒரே ஸ்தபதியால் செய்யப்பட்டவை.

வெள்ளிக்கிழமையும் பௌர்ணமியும் இணைந்து வரும் நாளில் இம்மூன்று அம்பிகைகளையும் ஒரே நாளில் முறையே காலை, நண்பகல், மாலையில் தரிசித்தால் நினைத்தன யாவும் பெறலாம்.

இ) நியாய வாடகை நிர்ணயம்

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டிடங்களுக்கான வாடகை குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையேனும் ஆணையரால் அமைக்கப்பட்டுள்ள குழுவினால் திருத்தியமைக்கப்பட வேண்டும். அரசாணையின்படி, நிலத்தின் சந்தை மதிப்பு மற்றும் கட்டிடத்தின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். 4.6.1999ல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கான கணக்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. அவ்வுத்திரவு 27.4.2000ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மேற்கண்ட 27.4.2000ம் தேதிய அரசு உத்திரவு மறுபரிசீலனை செய்யப்பட்டு. 1.11.2001 முதல் நியாயவாடகை நிர்ணய நடவடிக்கைகளைத் தொடர ஆணையிடப்பட்டது. இதன்படி நியாயவாடகை நிர்ணயிக்கும்பணி மீண்டும் தொடரப்பட்டு திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மனைகள் ஆகியவற்றிற்கு நியாயவாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை 13,236கட்டிடங்களுக்கும், 20,364 மனைப்பகுதிகளுக்கும் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 3.62 கோடி வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

- தொடரும்

## தாலியுணர்த்தும் தத்துவம்

தாலம் என்பது பனை ஓலையைக் குறிக்கும்

அந்தப்பனை ஓலையை ஒழுங்கு செய்து மஞ்சள் தடவி அதில் பிள்ளையார் சுழியிட்டு,

“இன்னாருடைய மகளை இன்னாருடைய மகன் மணந்து கொண்டார் வாழ்க”


என்றெழுதி அதைச் சுருட்டி மஞ்சள் கயிற்றிலே கோத்து மணமகள் கழுத்திலே அணிவிப்பர்.

தால ஓலையில் எழுதிக் கட்டியதனால் அதற்குத் தாலி என்ற பெயர் வந்தது.

பனை ஓலை தண்ணீர்பட்டு நைந்து போவதால் தாலியைத் தங்கத்தினால் செய்து தரித்துக் கொண்டனர்.

மனைவிக்கு மணவாளனே தெய்வம் ஆதலின் கணவருடைய இரு பாதங்கள் போல் திருமாங்கல்யத்தைச் செய்து மார்பில் தரித்துக் கொள்ளும் பழக்கம் வந்து விட்டது.

தான் அறிவாளியாக இருக்க வேண்டும்என்று எண்ணுவது எல்லோருக்கும் இயல்பே. தான் மூடனாக இருக்கவேண்டும் என்று யாரும் எண்ணமாட்டார்கள். தன்னைவிட வேறு ஒருவன் அறிஞனாக இருப்பதில் ஒருவனுக்கு மகிழ்ச்சியேற்படுவதில்லை. ஆனால் தன்னைவிட தன் மகன் அறிவுள்ளவனாக ஆவதில் அளவற்ற மகிழ்ச்சியுண்டாகின்றது.



## சேக்கிழார் அமைச்சர் ஆன வரலாறு

# அருள் மொழி அரசு

டாக்டர் திரு முருக கிருபானந்தவாரியார்

“தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது”

என்பது பொய்யாமொழி.

தொண்டைநாட்டில் குன்றத்தூர் என்பது ஒரு பழம்பதி. வளமை மிக்க அப்பதியிலே வேளாளர் குலத்திலே, சேக்கிழார் மரபில் ஒருவர் தோன்றினார். அவருக்கு இரண்டு குமார மணிகள், மூத்தவர் அருண்மொழித்தேவர், இளையவர் பாலறாவாயர்.

இரு மக்களைப்பெற்று இல்லறமாய நல்லறத்தில் நின்ற அவர் மக்கட்குக் கல்வி பயிற்றுவித்தனர். மூத்தவராய அருண்மொழித் தேவர் அதிநுட்பமான மதி நுட்பமுடையவராய்த் திகழ்ந்தார்.

தந்தையார் சோழ மன்னனிடத்தில் தொழில் புரிந்திருந்தனர். சோழன் அவரை நோக்கி மூன்று வினாக்கள் வினாவினான். மறுநாள் வந்து விடை கூறுமாறு பணித்தான். “உலகினும் பெரியது எது? “மலையினும் பெரியது எது”? “கடலினும் பெரியது எது”? இந்த மூன்று வினாக்களையும் எழுதிய ஓலையை எடுத்து வந்து அவர் தனது இல்லஞ்சேர்ந்தார்.

இரவெல்லாம்ஆராய்கின்றார்.நூல்களை யெல்லாம் புரட்டுகின்றார். சுற்றும் முற்றும் பார்க்கின்றார்.

**கண் சுழன்றது கருத்துஞ் சுழன்றது**
**மண் சுழன்றது மனமுஞ் சுழன்றது**
**எண் சுழன்றது இதயஞ் சுழன்றது**
**விண் சுழன்றது விடைவிளங்காமையால்.**

என்ன சொல்வது? என்று ஏங்கினார். பொழுது விடிந்தது. உரிய காலத்தில் வழக்கம் போல் நீராடவில்லை. வழிபாடு செய்யவில்லை. உச்சிப்பொழுதாயிற்று; எழுந்தார். திருநீறு பூசினார். வாடிய உள்ளத்துடன் புறப்பட்டார்.

தந்தையின் வாட்டத்தையும் நாட்டத்தையும் அருண்மொழித்தேவர் கண்டார். பிதாவைத் தொழுதார். ‘முந்தையங்கடவுளாகிய தந்தையே! ஏன் தங்கள் திருமுகம் வாடியுளது? ஆடிய பாதத்தை நினைப்பவர் வாடி வருந்து வானேன்? ஏன் வழிபாடும் செவ்வையாகப் புரியவில்லை? உணவும் உட்கொள்ளவில்லை. தங்கள் வருத்தத்திற்குக் காரணம் யாது?” என்று வினவினார்.

தந்தை : என் கண்ணே! நீயோ சிறு பிள்ளை. இது பெரிய விஷயம். உனக்கேன் இந்த விசாரம். உன்னிடம் சொல்வதனால் என்ன பயன்? அப்பா! அரசர் முனிவு கொள்வார். விலகு, நான் போக வேண்டும்.

அருண்மொழித்தேவர் - என்னையீன்ற எந்தையே! அது என்ன விஷயம்?கருணை கூர்ந்து சொல்லுங்கள். பொன்னம்பலநாதர் தங்கள் உள்ளக்கவலையைத் தீர்ப்பார்.



தந்தை : மகனே! மன்னர் என்னை மூன்று வினாக்கள் வினவினார். “உலகினும் பெரியது எது? மலையினும் பெரியது எது? கடலினும் பெரியது




எது? என்ற மூன்று கேள்விகளுக்கும் விடை கூறவேண்டும்" என்றார். இவைகளைத் தான் இரவெல்லாம் சிந்தித்தேன். விளங்கவில்லை. தக்க விடை கூறவில்லையென்றால் அரசன் தண்டிப்பான்.

அருண்மொழித்தேவர்: ஐயனே! இதற்கா இவ்வளவு பெரிய ஆலோசனையும் வாட்டமும்! நன்றாக இருக்கின்றது. நீங்கள் சாப்பிடுங்கள், இந்த மூன்று வினாக்களுக்கும் அடியேன் விடையெழுதித் தருகின்றேன். விடையவன் இருக்க விடைக்கு என்ன பஞ்சம்.

தந்தை அதிசயமுற்றார். சிறிது உணவு உட்கொண்டார். அதற்குள் அருள்மொழித்தேவர் ஒரு ஓலையைக் கொணர்ந்து தந்தை பால் தந்தார். அதில் பின்வரும் திறக்குறட்பாக்கள் எழுதப்பட்டிருந்தன.

**உலகத்தினும் பெரியது**
**காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப்பெரிது**
**மலையினும் பெரியது**
**நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப்பெரிது.**
**கடலினும் பெரியது**
**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.**

தந்தையார் மூன்று வினாக்களுக்கும் தக்க விடைகள் திருக்குறளிலிருந்தே தேர்ந்து எடுத்த மகனுடைய அறிவுடைமையே எண்ணி இறும் பூது கொண்டார். எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார். அந்த ஓலையைக் கொண்டுபோய் சோழ மன்னராகிய அநபாயனிடம் தந்தார். மன்னர் பெருமான் அதனை உற்று நோக்கினார். கையெழுத்து அவருடையது அன்றென உணர்ந்தார்.

"ஐயா! இது யாருடைய எழுத்து" என்று கேட்டார். பெரியவர் மன்னரை வணங்கி, "வேந்தர் பெருமானே! வினாக்களுக்கு விடை யுணராது விழித்தேன். இரவுப்பொழுதையும் சிந்தனையில் கழித்தேன். என் மதியையும் பழித்தேன், எனது செல்லப்பிள்ளை இவ்விடையை எழுதிக்கொடுத்தான்" என்றார்.



சோழமன்னர் கேட்டு வியப்பும் நயப்பும் அடைந்தார். உடனே பல்லக்கு அனுப்பி அருள் மொழித்தேவரை வரவழைத்தார். வரவேற்று உபசரித்தார். அவருடைய திருமுகமண்டலத்தில் பொலியும் அருட்பொலிவைக்கண்டார், அவருடைள பெருமையை நன்கு மதித்தார். அவரைத் தமது அரசாங்கத்திற்கு முதன் மந்திரியாக அமைத்துக் கொண்டார். குடும்பப் பெயராகிய சேக்கிழார் என்ற நாமமே அவருடைய நாமமாக வழங்கலாயிற்று.

சேக்கிழாருக்கு உத்தமச்சோழபல்லவர் என்ற பட்டத்தையும் தந்தார். வாணிதேவி, தான் வாழும் பூவையும், சங்கப்புலவோர் பாவையும், பிரமதேவரது நாவையும், பொதிய மலை மேவும் முனிவர் கோவையும் மறந்து சேக்கிழார் திருநாவில் குடிகொண்டாள்.



"பூவை மறந்தனள் வெண்டா மரைமயில்
புகல்தரு சங்கப்புலவோர் சொற்
பாவை மறந்தனள் தேச சுபாடித
பயனை மறந்தனள் பதுமத்தோன்
நாவை மறந்தனள் பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனும்
கோவை மறந்தனள் சேவையர் காவல
னார்திரு நாவிற் குடிகொண்டாள்"

அநபாயமன்னர் சிவகதை படியாது அவகதை படிப்பதை யறிந்த சேக்கிழார்

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்றபடி மன்னரை இடித்துக்கூறி, திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார்.

"தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர் படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத்
தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணக்கதை உலகறிய
விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார்
அடிபோற்றி."

# அப்பர் போற்றிய அருந்தமிழ்ப் பண்பாடு

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"
என்பது திருக்குறள்.
நாட்டிற்காக பாடுபட்ட சான்றோர்களின் திருத்தொண்டை மதித்துப் பாராட்டுவது நற்பண்பு மிக்கவர்களின் கடமை என்பது இக்குறள் எடுத்துக் கூறுகின்றது.
"வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்கத்" திரு அவதாரம் புரிந்த பெருமைக்கு உரியவர் திருஞானசம்பந்தர்.


மூன்று வயதிலேயே இவர், உமாதேவியார் அளித்த ஞானப்பால் உண்டு, தேவாரம் பாடும் மகிமை பெற்றார்.

சிவஞான சம்பந்தர் தம் அவதார நோக்கம் நிறைவேற, சமண் கொடுங்கோல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த திருஆலவாய் சென்றார்.

கொல்லாமை மறைந்துறையும் சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீ வைத்தார்கள்.

"பையவே சென்று பாண்டியர்க்கு ஆக" என்று கூறி, சமணர்கள் வைத்த தீ திரும்பச் சென்று கூன் பாண்டியனை வெப்புநோயாகப் பற்றுமாறு திருவருள் புரிந்தார் திருஞான சம்பந்தர்.





"மந்திரமாவது நீறு" எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகம் பாடி கூன் பாண்டியனின் வெப்பு நோய் தீர்த்தும், அனல் புனல் வாதங்களால் சமணரை வென்று கழுவேறச் செய்தும் சைவ சமயத்துக்கு மறுமலர்ச்சியை உண்டாக்கியும், கூன் பாண்டியனின் கூனை நிமிர்த்து நின்றசீர் நெடுமாறன் ஆக்கியும் அற்புதங்கள் புரிந்தார் நம் திருஞானசம்பந்தர்.

இத்தகைய திருஞானசம்பந்தர் தம் அருந்தொண்டினைப் போற்றிக் கொண்டாடவேண்டுவது தமிழ்கூறு நல்லுலகின் கடமை அல்லவா! இதை உணர்த்தும் வகையிலேயே அப்பரைக் காணத் திருப்பூந்துருத்திக்குத் திருஞானசம்பந்தர் வருகை தந்தபொழுது, அப்பர் தாமே பூந்துருத்தி நகர் எல்லைக்கே திருஞானசம்பந்தரை வரவேற்கச் சென்றார்.

அத்துடன் திருஞானசம்பந்தர் ஏறி வந்த சிவிகையைப் பிறர் அறியாவண்ணம் தாமே தம் தோளில் தாங்கிச் சுமந்தார்.

"எங்குற்றார் அப்பர்?" என்று திருஞான சம்பந்தர் அடியார்களை வினவ "உம்மடியேன் உம் சிவிகை தாங்கிவரும் பெரும்பேறுற்று இங்குற்றேன்" என்று பாலகராம் திருஞானசம்பந்தர்தம் சிவிகையைத் தொண்டுக் கிழவராம் திருநாவுக்கரசர் சுமந்தவாறே பதில் பணிவுடன் உரைத்தார் என்றால், அப்பரடிகளார்தம் அரும் பண்பினைப் போற்ற நம்மால் ஆகுமா? அப்பரடிகள் அருந்தமிழ்ப் பண்பாட்டின் திருவுருவம் அன்றோ!

**- குன்றத்தூரில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் "செந்தமிழ் வாரிதி" முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**

## ஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழி ஊருக்கு வழங்கும் பிற பெயர்களும் பெயர்க்காரணங்களும்

தில்லைப் பெருமானுடன் வாதம் புரிந்த குற்றம்போக காளி வந்து வழிபட்டதால் ஸ்ரீகாளி எனப் பெயர் உண்டானது. இதுவே சீகாழி, சீர்காழி என மருவி வழங்கி வருகின்றது.

இத்தலத்திற்கு வழங்கும் பிற பெயர்கள்.

பிரமன் வழிபட்டதால் பிரம்மபுரம்.

இறைவன் மூங்கில் வடிவமாகத் தோன்றியதால் வேணுபுரம்.

சூரபதுமனுக்குப் பயந்து தேவர்கள் புகலிடம் கொண்டதால் புகலி.

தேவகுரு வியாழன் வழிபட்டு, குருத்துவம் பெற்றமையால் வெங்குரு.

பிரளய காலத்தில் இறைவன் உமையோடு சுத்தமாயையைத் தோணியாகக் கொண்டுவந்து தங்கியதால் தோணிபுரம்.

பூமியைப் பிளந்து சென்ற இரணியாக்கனைக் கொன்ற வராகமூர்த்தி வழிபட்டதால் பூந்தராய். தலைக் கூறாகிய இராகு வழிபட்டதால் சிரபுரம்

புறா வடிவில் வந்த அக்கினியால் சிபிசக்கரவர்த்தி நற்கதி பெற்றமையால் புறவம்.

சண்பைப் புல்லால் மாய்ந்த தம் எதுகுலத்தோரால் வந்த பழி நீங்க கண்ணன் வழிபட்டதால் சண்பை.

மீனவப்பெண்ணாள் மச்சகந்தியைக் கூடியதால் உண்டான கொச்சையாம் பழிச்சொல் நீங்கப் பராசரர் பூசித்தமையால் கொச்சைவயம். மலங்கள் நீங்கிட உரோமச முனிவர் வழிபட்டதால் கழுமலம்.



## திருஞானசம்பந்தர் தம் தேவியுடன் காட்சியளிக்கும் திருத்தலம்

திருஞானசம்பந்தருக்கு அவர்தம் பதினாறாம் வயதில் திருமணம் நடைபெற்றது.

அவர்தம் தேவியார் திருப்பெயர் "தோத்திரப் பூர்ணாம்பிகை" என்பதாகும்.

திருஞானசம்பந்தரும், தோத்திரப் பூர்ணாம்பிகையும் திருமணக் கோலத்தில் வீற்றிருக்கும் திருமேனிகள் "ஆச்சாள்புரம்" என வழங்கும் திருநல்லூர்ப் பெருமணத்தில் உள்ள அருள்மிகு சிவலோகத் தியாகர் திருக்கோயிலில் உள்ளன.




திருமண நாளிலேயே தம் துணைவியாருடனும், அடியார்களுடனும் சுவாமியுடன் ஐக்கியமான அற்புத வரலாறு திருஞானசம்பந்தருடைய அருள்வரலாறு ஆகும்.

திருக்கோயில் ஜூன் 2004

| | | |
|---|---|---|
| முன் அட்டை | : | திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி (மூலவர்). |
| பின் அட்டை | : | திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி (உற்சவர்), கோபுரமும், திருக்குளமும். |

# தோஷ நிவர்த்திக்கு நவகிரகக் கோயில்கள்



## அருள்மிகு தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில், திருநள்ளார் (சனிஸ்தலம்)

அமைவிடம் : காரைக்காலில் இருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது

இறைவன் : ஸ்ரீ தர்ப்பாரண் யேஸ்வரர், திருநள்ளாற்றீஸ்வரர் (சுயம்பு மூர்த்தி)

இறைவி : ஸ்ரீபிராணம்பிகை,போக மார்த்த பூண் முலையாள் (சக்தி பீடங்களுள் ஒன்று)

தல விருட்சம் : தர்ப்பை


தீர்த்தம் : பிரமதீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், நளதீர்த்தம் மற்றும் ஏனைய தீர்த்தங்கள்

பாடியவர்கள்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், அருணகிரிநாதர்.

சனிபகவான் தலவரலாறு : திருநள்ளாறு சிவத்தலமாயினும் இங்குள்ள சனிபகவான் சந்நிதி மிகவும் பிரசித்தி பெற்றது. சனிப்பெயர்ச்சிக்கு இங்கு வந்து கூடும் மக்கள் லட்சக்கணக்கானவர். நிடத நாட்டு மன்னனான நளன், விதர்ப்ப நாட்டு வீரசேனன் மகள் தமயந்தியை சுயம்வரத்தின் மூலமாக மணந்து கொண்டான். தேவர்களைப் புறக்கணித்து நளனைத் தமயந்தி திருமணம் புரிந்ததைக் கேட்டுச் சனிபகவான், நளன்மேல் கோபம் கொண்டார். நளனிடம் ஏதும் குறைகாணாது 12 ஆண்டுகள் காத்திருந்து காலில் நீர்பட்டும் படாமலும் கழுவிச்சென்ற குற்றங்கண்டு அவனைப்பற்றினார். இதனால் நளன்பட்ட துன்பங்கள் நாடறியும். துன்பங்கள் தீர்ந்து நாடாளத் தொடங்கியதும் சனியின் வேகந்தணியாமையின் தீர்த்தயாத்திரையை நாரதர் உபதேசித்தபடி மேற்கொண்டார். திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலத்தில்) அவனைச் சந்தித்த பரத்வாஜ முனிவர் திருநள்ளாறு சென்று வழிபடுமாறு அறிவுரை கூறினார். அவ்வாறே நளன் திருநள்ளாறடைந்து தீர்த்தம் உண்டாக்கி, நீராடி இறைவனை வழிபட, திருநள்ளாற்று ஆலயத்துள் நுழைந்தான். அவனைப் பற்றியிருந்த சனி உள்ளே நுழைய அஞ்சி அங்கேயே தங்கிவிட்டார். இதனால் இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

**தலம் :** இத்தலம் சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று, (ஏனையவை : திருவாரூர், நாகப்பட்டினம், திருமறைக்காடு, திருக்காற வாசல், திருவாய்மூர், திருக்கோளிலி என்பன). இங்குள்ள தியாகராஜர் - நகவிடங்கத் தியாகர் என்று அழைக்கப்படுகிறார். நடனம், உன்மத்த நடனம். திருஞானசம்பந்தர் அனல் வாதத்தில் எழுதியிட்ட "போகமார்த்த பூண்முலையாள்" எனத் தொடங்கும் பதிகம் 'பச்சைத் திருப்பதிகம்'இத்தலத்திற்குரிய பாடலேயாகும். மரகதலிங்கப் பூஜை தினசரி நடைபெற்று வருகிறது.

சனி: சனிபகவானுக்கு மந்தன், சனைச்சரன் என்னும் பெயர்களுண்டு. சனைச்சரன் என்பதே சனீஸ்வரன் என்றாயிற்று. யமன் தன் இரண்டாந்தாயின் மீது கொண்ட



கோபத்தால் சனியை அடித்தான். அதனால் சனியின் கால் நொண்டியாயிற்று, தக்ஷயாகத்தில் சனி ஒரு கண்ணையிழந்தார். சனிபகவான் 4 கரங்களுடையவர். வலக்கைகளில் வரத-அபயமுத்திரையும், இடக்கைளில் வில்லும், சூலமும் உடையவர். இவருக்கு காகம் வாகனமாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர் மனைவியின் பெயர் ஜ்யேஷ்டாதேவி. இவருக்கு தானியம்-எள், சமித்து-வன்னி, மலர்-கருநீலம், சுவை-கசப்பு, நண்பர்கள்-புதன், குரு, சுக்கிரன் ஆகியோர், பகைவர்-சூரியன் , சந்திரன், செவ்வாய்.

சனி பகவான் நவக்கிரகங்களில் ஒருவர், ஒவ்வொரு ஜாதகத்திலும் ஆயுள் காரனாக விளங்குபவர், சனியைப்போல் கொடுப்ப வருமில்லை, கெடுப்பவருமில்லை என்பது பழமொழி. ஆதலின் இவரை அனைவரும் பயபக்தியுடன் வழிபடுவர். இத்தலத்தில் சனிபகவான் அனுக்கிரக மூர்த்தியாக விளங்குகின்றார். இவருக்கு தனியே அஷ்டோத்ரம். சஹஸ்ரநாம அர்ச்சனைகள் உண்டு. திருமால், பிரமன், இந்திரன், திசைப்பாலர்கள், அகத்தியர், புலஸ்தியர், அர்ச்சுனன், நளன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். இத்திருத்தலத்தில் சிறிய ராஜகோபுர நுழைவு வாயிலின் வலது புறத்தில் சனிபகவான் சன்னதி உள்ளது. மகர கும்பராசிக்காரர்களுக்கு சனி அதிபதி. இச்சன்னதி முன்புறம் மகர கும்பராசிகளின் உருவங்கள் உள்ளன. சனிதோஷமுள்ளவர்கள் எள் முடிச்சு தீபம் போடும் பிரார்த்தனை இங்கு விசேஷம்.

**நளதீர்த்தம் :** கோயிலுக்குச் சற்றுத் தள்ளி உள்ளது. இத்தலத்திற்கு வரும் மக்கள் எண்ணெய் தேய்த்து இதில் நீராடுகிறார்கள். இதில் நவக்கிரகங்களுக்கும் தனித்தனிக் கிணறுகள் உள்ளன. நளன் தோஷம் நீங்க வழிபட்ட தலம். நவக்கிரக சந்நிதி இல்லை. நளதீர்த்தத்துக்கு அண்மையில் நளகூபம் என்றொரு பெயரில் கிணறு ஒன்றும் இருக்கிறது. நளனுக்காக வேண்டி இறைவன் காசியிலிருந்து கங்கையை நந்திகேஸ்வரர், பைரவர் மூலம் வருவித்து தனது சூலாயுதத்தால் உண்டாக்கப் பட்டதாக கூறப்படுகிறது. அக்கூபத்தை தரிசனம் செய்வதோடு சரி. முழுகும் வழக்கம் இல்லை.

திருக்கோயில் முகவரி
நிர்வாக அதிகாரி (திருக்கோயில்கள்)
அருள்மிகு தப்பாரண்யேஸ்வரர்
திருக்கோயில்,
திருநள்ளார் அஞ்சல், காரைக்கால்,
புதுவை மாநிலம்.
தொலைபேசி எண்கள் :
*04368-236530, 236504.*



**இருப்பிடம் :**

தமிழகத்தின் தலைநகராம், சென்னை மாநகரில் சென்ட்ரல் ரயில் நிலையம் மற்றும எழும்பூர் ரயில் நிலையத்திற்குத் தென்கிழக்கே சுமார் 4 கி. மீ. தொலைவில் மெரினா கடற்கரை அருகில் அமைந்து உள்ளது.

**கருவறையில் மூலவர் திருக்கோலமும் திருநாமமும்**

பார்த்தசாரதி என்றழைக்கப்படுகிறார்.

**தனிக்கோயில் தாயார்:**


ஸ்ரீவேதவல்லித்தாயார் : இவரைத் திருக்கல்யாணம் செய்து கொள்வதற்காக ஸ்ரீ ரங்கநாதர், இத்தலத்திற்கு எழுந்தருளினார் என்பது ஐதீகம்.

**ஐந்து பெருமாள் திருத்தலம் :**

# பார் போற்றும் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்

பெருமாள்மூலவர்பார்த்தசாரதி வலது கையில் (சங்கு) பாஞ்சசன்யம் ஏந்தி (சக்கரம் இன்றி) இடது கை திருவடியை காட்டுகின்ற 'தான' முத்திரையோடு கிழக்கு முகமாக நின்ற திருக்கோலம்.

கருவறையில் அவருடன் தேவியார் ருக்மணி, அண்ணாபலராமர், தம்பிசாத்யகி, பிள்ளைபிரத்யும்னர், பேரன் அநிருத்தன, ஆகியோர் எழுந்தருளி அருள்மிகு வேங்கட கிருஷ்ணன் என்ற திருநாமம் தாங்கி மூலவர் பெருமாள் தமது குடும்பத்தாருடன் ருக்மணிதாயார் சமேதராய் எழுந்தருளியுள்ளது அவசியம் அனைவரும் தரிசிக்க வேண்டிய அரிய திருக்கோலம்.



தருமத்தை நிலைநாட்ட வேண்டி நிகழ்ந்த மஹாபாரதப்போரில் பீஷ்மர் எய்த அம்புகளை பார்த்தனுக்குத் தேரோட்டியாக நின்று தாமே தாங்கியதால், ஏற்பட்ட வடுக்களை உற்சவர் திருமுகத்தில் இன்றும் தரிசிக்கலாம். இந்த ஐதீகத்தின் அடிப்படையில் பெருமாள் ஸ்ரீ

ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், அகோபிலம், அயோத்தி ஆகிய ஐந்து திவ்ய தேசத்துத் பெருமான்களை இங்கு ஒரே திருக்கோயிலில் சேவிக்கலாம். ஐவரும் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி யுள்ளது சிறப்பு. ஐவருக்கும் தனித்தனியே பற்பல உற்சவமும் உண்டு. எனவே, ஆண்டு முழுவதும் இத்திருக்கோயிலில் உற்சவம் தான்.

**ஆழ்வார்கள் மங்களாசாசனம்**

பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திரு மங்கையாழ்வார் ஆகியோர் மங்களாசாசனம் செய்து அருளிய சிறப்புப் பாசுரங்களால் 108 திருப்பதிகளுள் முக்கியத்தலம் இது.

**பாடல் பாடிய மற்றவர்கள் :**

தியாகபிரும்மம், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் பாடியுள்ளனர். குறிப்பாக பாரதியார் பாடிய கண்ணன் பாடல்கள் அனைத்தும் இப் பெருமாளைப்

பற்றியது எனக் குறிப்பிடுவர்.

**பிரத்தியக்ஷம் : (காட்சியளித்தது)**

| | | |
|---|---|---|
| சுமதி சோழராஜன் | - | பார்த்தசாரதி. |
| அத்ரி முனிவர் | - | நரசிம்மன் |
| மதுமான் | - | ராமர் தன் தம்பிகளுடன் |
| ஸப்தரோமா | - | கஜேந்திர வரதராஜர் |
| ப்ருகுபுத்ரி | - | வேதவல்லித் தாயார் |

**எழுந்தருளல் :**

ஆத்ரேய முனிவரால் வைகாநஸ ஆகம முறைப்படி பிரதிஸ்டை

**விமானம் :**

ஆனந்த நிலைய விமானம்

**க்ஷேத்திரம் : (புராணப் பெயர்)**

பிரஹ்மாண்ட புராணப்படி பிருந்தாரண்ய க்ஷேத்திரம் (துளஸீவனம்)

**(திருக்குளம்) புஷ்கரணி :**

கைரவிணீ புஷ்கரணி (இந்த்ர, ஸோம, மீன, அக்னி, விஷ்ணு) ஐந்து தீர்த்தங்களைக் கொண்டது. திருக்கோயிலின் எதிரே அமைந்துள்ளது.

**வரையறை :**

நைவேத்தியத்திற்கு கடலை எண்ணெய், மிளகாய் சேர்ப்பதில்லை.

**சம்பிரதாயம் :**

தென்கலை ஸ்ரீ வைஷ்ணவம்

**பூஜைமுறை :**

ஸ்ரீ வைகானஸ ஆகமம்

**பூஜா காலம் :**

ஆறு காலப் பூஜை

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரத்தின் நடுநாயகமான அமைந்துள்ளது திருவல்லிக் கேணி எனும் திவ்யதேசம். கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள இத்தலத்தை, பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய மூவர் மங்களாசாஸநம் செய்துள்ளனர்.

இத்தலத்திலுள்ள திருக்குளமானது அல்லி மலர்கள் நிறைந்து காணப்பட்டதால் அல்லிக்கேணி (கேணி = குளம்) என்று பெயர் பெற்றது. அப்பெயரே ஊருக்கு நிலைத்து விட்டது. இதைத் தவிர கைரவிணி, பிருந்தாவனம், துளசிவனம் என்ற பல பெயர்களும் உண்டு.



அருள்மிகு நரசிம்ம மூர்த்தி

முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசைப் பிரானும் இத்தலத்தில் பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்து தவம் செய்ததாக குருபரம்பரை வரலாறுகள் பகர்கின்றன. ஸ்ரீராமானுஜர் மணவாளமாமுனிகள் வேதாந்தாசாரியார் ஆகியோர் இத்தலத்திற்கு எழுந்தருளி, எம் பெருமானை மங்களாசாஸனம் செய்துள்ளனர்.

சங்கீதமேதை தியாகராஜ ஸ்வாமிகள், தத்துவமேதை விவேகானந்தர் போன்றோர் இத்தலத்திற்கு வந்து எம்பெருமானுடைய அருளைப் பெற்றிருக்கின்றனர். தேசியகவி பாரதியார் இத்தலத்திலேயே வாழ்ந்திருந்து அனுதினமும் ஸ்ரீ பார்த்த சாரதி எம்பெருமானை வழிபட்டிருக்கிறார். அவர் பாடியுள்ள கண்ணன் பாடல்கள் அனைத்தும், ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமானைக் கருத்தில் கொண்டே என்று கூறுவர்.

கணிதமேதைராமானுஜம், அரசியல் மேதை சத்தியமூர்த்தி ஆகியோரும் இத்தலத்தில் வாழ்ந்தவர்களே.

சுமதி என்னும் அரசன் திருமலை (திருப்பதி)யில் எழுந்தருளியிருக்கும் வேங்கடவனிடம் மிகுந்த பக்தியுள்ளவன். அவன் ஒருமுறை வேங்கடவனைக் கிருஷ்ணனாகவே சேவிக்க வேண்டும் என்று விரும்பினான். அவனுக்காகவே வேங்கடவன் கிருஷ்ணனாக இத்தலத்தில் சேவை சாதித்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது.

எனவே இத்தலத்தில் எழுந்தருளியுள்ள

## பார்த்தசாரதி மகிமை

இப்பொழுதே பார்த்தசாரதி ஆலயம் செல். மிகுந்த ஆனந்தத்தையும் பரிபூரண உடல் நலத்தையும் சகல செல்வங்களையும் அருள்மிகு பார்த்தசாரதிப் பெருமான் வழங்கி உன்னை மேன்மையுறச் செய்வார்.

- சுவாமி விவேகானந்தர்



மூலவருக்கு வேங்கடகிருஷ்ணன் என்றே திருநாமம் வழங்கப்படுகிறது. பாரதப்போரில் அர்ச்சுனனுக்கு ஸாரதியாக இருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான். ஆயுதம் எதையும் எடுப்பதில்லை என்று செய்த சபதத்திற்கேற்ப ஒரு திருக்கரத்தில் சங்கு மட்டும் ஏந்தி (சக்கராயுதம் இல்லாமல்) எழுந்தருளியிருக்கிறார்.

மேலும் ஸாரதிக்கே உரிய மீசையுடன் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது இத்தலத்தில் மட்டுமேயுள்ள சிறப்பாகும். தனது மனைவியான ருக்மிணிப் பிராட்டி, தமையன் பல ராமன், தம்பி ஸாத்யகி, பிள்ளை பிரத்யும்னன், பேரன் அநிருத்தன் ஆகியோருடன் குடும்ப ஸமேதராக எழுந்தருளியுள்ளனர்.

**குடும்பத்துடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி வழிபடும் அன்பர்களையும் குடும்பத்தோடு குதுகலமாக வாழத் திருவருள் புரிவார் என்பது கண்கண்ட உண்மையாகும்.**

பாரதப் போரில் அர்ச்சுனன் மீது பீஷ்மர் தொடுத்த அம்புகளையெல்லாம் தானே முன்னின்று ஏற்றுக் கொண்டு அர்ச்சுனனுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததை விளக்கும் வகையில் இன்றும் உத்ஸவர் ஸ்ரீ பார்த்த ஸாரதி முகத்தில் அம்பு பட்ட வடுக்களுடன் எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீபார்த்தஸாரதியைத் தவிர ஸ்ரீமந்நாதன், ஸ்ரீநரஸிம்மன், ஸ்ரீராமன், ஸ்ரீகஜேந்திர வரதன் ஆகியோரும் தனித்தனி ஸன்னிதிகளில் எழுந்தருளியுள்ளனர். ஸ்ரீமந்நாதனின் தனிக் கோயில் நாச்சியாரான வேதவல்லித் தாயருக்கும், ஆண்டாளுக்கும் தனித்தனி ஸன்னிதிகள் உள்ளன.

ஸ்ரீராமானுஜரின் திருத்தகப்பனாரான ஆசூரி கேசவாசாரியர் இத்திலத்திற்கு வந்து யாகம் செய்து, ஸ்ரீ பார்த்தஸாரதியின் அருளாலேயே ஸ்ரீராமானுஜரைப் புத்திரராக அடைந்தார்.

### கும்பாபிஷேகத்திற்கும் கருடனுக்கும் உள்ள தொடர்பு

24.5.2004 அன்று திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்த சாரதி சுவாமி திருக்கோயில் மகாசம்ப்ரோட்சண வைபவம் காலை 6.30 மணிக்கு நடைபெற்றபோது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு. பி.சி. இராமசாமி அவர்கள் "இன்னும் கருடன் மேலே வட்டமிட வில்லையே"! என்று வினவினார்கள். அதற்கு ஆணையாளர் அவர்கள் நிச்சயம்வட்டமிடும்" என்று உறுதியுடன் கூறிய அதேசமயம் அதுவரை தென்படாத கருடன் தென்பட்டு மூலவர் விமானத்தை வட்டமிட்டுப் பறந்தது. அது கண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களும், ஆணையாளர் அவர்களும், திரளாகக் கூடியிருந்த பக்தர்களும் மிகுந்த பரவசம் உற்றனர்.

வருடம் முழுவதும் இத்தலத்தில் உத்ஸவங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்தகைய பெருமைகள் மிகப் பொருந்திய பார்போற்றும் அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் மகாசம்ப்ரோட்சணம் 24.05.04 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இவ்விழாவைக் கண்டு களித்து அருள்மிகு பார்த்தசாரதி பெருமானின் திருவருள் பெற்றார்கள்.

அருள்மிகு பார்த்தசாரதிப் பெருமான் பொன்னார் திருவடிகள் போற்றி! போற்றி!!



# திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமித் திருக்கோயில் மகா சம்ப்ரோக்ஷணம்

## சிறப்பம்சங்கள்

1. திருக்கோயிலின் அனைத்துக் கருங்கல் தூண்கள் மூலிகை மற்றும் அனுமதிக்கப்பட்ட மென்மையான இரசாயனப் பொருட்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு அப்பகுதிகளைப் பாதுகாக்க வார்னீஷ் செய்யப்பட்டுள்ளது.
2. மூலஸ்தான விமானத்தில் ஆனந்த விமான பகுதியில் தங்க ரேக் தகடுகள் பொருத்தப்பட்ட பகுதி தவிர எஞ்சிய பகுதியில் வேலைப்பாடுகளுடன் கூடிய தாமிரத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்தது. அதன் மீது வர்ணப் பூச்சு இருந்ததால் அவைகள் பிரித்தெடுக்கப்படாது கடந்த ஆண்டுகளில் சம்ப்ரோக்ஷணம் நடைபெற்று வந்துள்ளன. இதனால் மூலஸ்தான விமானத்தில் நீர்க்கசிவு ஏற்பட்டது. தற்போது அவைகளைப் பிரித்து அப்புறப்படுத்தித் தங்க ரேக் பதிக்கப்பட்ட தகடுகள் மீண்டும் பொருத்தப்பட்டுத் தாமிரத் தகடுகள் இருந்த பகுதியில் புதிதாக சுதை வேலைப்பாடுகள் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது.
3. மூலஸ்தானத்தில் கடந்த சம்ப்ரோக்ஷணத்தின் போது உட்பகுதி சுவற்றில் பதிக்கப்பட்ட கருப்பு கிரானைட் பலகைகள் அகற்றப்பட்டு சரியான உள் அளவீடு பராமரிக்கப்பட்டுள்ளது.
4. அந்தராள மண்டபத்தின் சுவற்றிலிருந்து கருப்பு கிரானைட் பலகைகளும் அகற்றப்பட்டு சரியான உள் அளவீடு பராமரிக்கப்பட்டுள்ளது.
5. நீண்டகாலமாக கண்காணிக்கப்படாத மூலஸ்தான விமானத்தின் உட்பகுதி முழுமையும் சீர்திருத்தம் செய்யப்பட்டு பொலிவுடன் உள்ளது.
6. அர்த்த மண்டபத்திலுள்ள அருள்மிகு ராமர் மற்றும் அருள்மிகு அரங்கநாதர் சந்நிதி ஆகியன புதுப்பிக்கப்பட்டு சேவார்த்திகள் தரிசனத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.
7. அருள்மிகு ராமர் சிலா விக்கிரகங்கள் சுமார் 2 அடி உயரம் உயர்வு செய்யப்பட்டு எளிய தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
8. அர்த்த மண்டபத்தில் சேவார்த்திகளின் வசதி கருதிக் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.
9. உற்சவர் எழுந்தருளும் மகா மண்டபத்தின் தென்புறம் இடைக்காலத்தில் சுவர் அமைக்கப்பட்டு காற்று மற்றும் வெளிச்சம் பாதிக்கப்பட்டிருந்தது. அச்சுவர் அகற்றப்பட்டு காற்று மற்றும் வெளிச்சத்திற்கு வழிவகை செய்யப்பட்டிருப்பதோடு சுவாமி அம்மண்டபத்தில் எழுந்தருளும் போது பெருந்திரளான சேவார்த்திகள் சேவை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.




ஆஞ்சநேயரை வழிபட்டால் அவர் கடலைத் தாண்டியது போல் நாம் பிறவிக் கடலை எளிதாகத் தாண்டிவிடலாம்.

10. திருமடைப்பள்ளியில் இடைக்காலத்தில் மேடையில் அமைக்கப்பட்ட கடப்பா கற்கள் அகற்றப்பட்டு, கருங்கல் மேடை அமைக்கப்பட்டுள்ளது.
11. திருமடைப்பள்ளியை தூய்மையாகப் பராமரிக்கவும், திருமடைப்பள்ளியில் பணிபுரியும் பணியாளர்களின் வசதியைக் கருதியும் மின் புகைப்போக்கி அமைக்கப்பட்டுள்ளது.
12. 1992-க்கு முன்பு இருந்தது போல் அனைத்துக் கோபுரங்கள் மற்றும் விமானங்களுக்கு ஏகவர்ணம் பூசப்பட்டு, சுதை சிற்ப வேலைப்பாடுகள் காண்போரின் கண்ணைக் கவரும் வண்ணம் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது.
13. மகா சம்ப்ரோக்ஷணத்தை முன்னிட்டு திருக்கோயில் வளாகத்தில் இயற்கையான மலர்களைக் கொண்டு கண்ணைக் கவரும் வகையில் அலங்காரம் செய்யப்பட்டது.
14. அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி மூலவர் தங்கக் கவசம் சுமார் 300 கிராம் அளவிற்கு தங்க ரேக் ஒட்டப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது.
15. விமானங்களில் தங்க முலாம் பூசப்பட்ட கலசங்களும் அமைக்கப்பட்டுள்ளது.



# அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில்

திருவான்மியூர், சென்னை - 41.



## தங்கரதத் திருப்பணி வேண்டுகோள்

சென்னை நகரில், திருவான்மியூரில் சுயம்பு மூர்த்தியாய் எழுந்தருளியுள்ள அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் வான்மீகி முனிவர், அகத்திய முனிவர், பிருங்கி முனிவர் போன்றோர் வழிபட்டதும், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் ஆகிய நாயன்மார்கள் பாடிப் பரவியுள்ள புகழ்மிக்கதுமான திருக்கோயிலாகும்.

புகழ்மிக்க இத்திருக்கோயில் திருப்பணிகள் சிறப்பாக சுமார் ரூ. 36 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிறவிப்பிணியுடன் பக்தர்களின் உடற்பிணி அனைத்தும் தீர்க்கும் அருள்மிகு மருந்தீசருக்குப் பிரார்த்தனைகளை நிறைவேற்ற வேண்டித் **தங்கரதம்** நிறுவிடுமாறு இத்திருக்கோயிலில் எண்ணிலடங்கா பக்தர்கள் நெடுநாளாக விடுத்துவரும் கோரிக்கையை ஏற்று சுமார் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் **தங்கரதத் திருப்பணி** துவங்கவுள்ளதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம். இப்பெருமைமிகு **தங்கரதத் திருப்பணியில்** பக்தர்கள் அனைவரும் எல்லாவகையிலும் பங்களிப்பதற்கான அரிய வாய்ப்பினைத் தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

இத்திருப்பணியில் பங்கு பெற விரும்பும் பக்தப் பெருமக்கள் தங்களது காணிக்கைகளைத் தங்கமாகவோ, பணமாகவோ, நேரிலோ, அஞ்சல் மூலமோ அல்லது இதற்கெனத் திருக்கோயிலில் நிறுவப்பட்டுள்ள உண்டியலிலோ செலுத்தலாம். பொதுமக்களும், பக்தகோடிகளும் பெருவாரியாக இந்த இறைகைங்கர்யத்தில் பங்கு கொண்டு எல்லாம் வல்ல அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை அருள்மிகுமருந்தீஸ்வரர் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

தங்கரதத் திருப்பணியில் பங்கு பெற விரும்புவோர் விவரங்கள் பெற அணுக வேண்டிய முகவரி :

"**செயல் அலுவலர்** *(Executive Officer)*

அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், *(Arulmighu Marundheeswarai Temple)*

திருவான்மியூர், சென்னை 600 041.

தொலைபேசி : 044 - 24410477

**ப. ராஜா** பி.எஸ்சி. பி.எல்.,

**இணை ஆணையர், சென்னை**

**எஸ். பாரதி,**
*நிர்வாக அதிகாரி*

**த. காவேரி பி.ஏ., பி.எல்.**
*தக்கார் / உதவி ஆணையர்*

விளம்பர உபயம் : ***T. ஜெயஸ்ரீ T. மணிகண்டன்,***
*64, வால்மீகிதெரு, திருவான்மியூர்*
*சென்னை - 41.*



கண்ணபெருமான் மனம் மகிழ்ந்திருந்த வேளையில், அவருடைய வரவினை தூதர்கள் போய் துரியோதனனுக்கு அறிவிக்க, துரியோதனன் நகரத்தை அலங்கரிக்குமாறு ஆணையிட மக்களும் அவ்வாறே தொல்லைநாயகன் வந்தனன் என்று மனமகிழ்ந்து நகரை அலங்கரிக்கின்றார்கள்.

மேகங்களின் பெரிய முழக்கம் போல, இசைக்கருவிகள் பல ஒலிக்க, துரியோதனன் தானே சென்று கண்ணனை எதிர் கொண்டு வரவேற்கப் புறப்படுகிறான்.

ஆனால் அங்கே தான் விதி துரியோதனனுக்கு எதிராகவும், கண்ணபெருமானுக்கு ஆதரவாகவும் சகுனியின் வடிவிலே வேலை செய்ய ஆரம்பிக்கிறது.

"நீ எதற்காக அவனைப்போய் எதிர்கொண்டு அழைக்க வேண்டும்?. அவ்வளவு பெரியவனா கண்ணன்?" என்று சகுனி, துரியோதனனைத் தடுத்துவிட, அவனும் கண்ணபெருமானை எதிர்கொண்டு வரவேற்கச் செல்லவில்லை.

# மகாபாரதம்

## 2

முனைவர் **த. அமிர்தலிங்கம்**

இரண்டுநாள் தேர்ப் பிரயாணத்திற்குப் பிறகு உபப்பிலாவியத்திலிருந்து தர்மரின் தூதுவராய்ப் புறப்பட்ட கண்ணபெருமான் தம் பரிவாரங்களுடன் அத்தினாபுரத்து எல்லையில் அமைந்திருக்கும் ஒரு அழகிய பூஞ்சோலைக்கு வந்து சேர்கிறார்.

உம்பர் நாயகனின் வரவினைக்கண்டு தும்பிகள் பாடுகின்றன. மயில்கள் ஆடுகின்றன. அவ்வழகிய இயற்கைக்காட்சியில்

கங்கையின் மைந்தர் ஆகிய வீடுமரும், துரோணரும், வில்வித்தையில் வல்லவராகிய விதுரரும் அசுவத்தாமனும், கிருபனும் முதலான

## சர்வரோக நிவாரணி: வைத்தியநாதரை வணங்கினால் மருந்து உருண்டை கிடைக்கும்

சீர்காழிக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ளதிருத்தலம் வைத்தீஸ்வரன் கோயில். உயிர்களின் நோய்களை நீக்கும்பொருட்டு இறைவர் இங்கு வைத்தியநாதராக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

உமாதேவியும் தைலபாத்திரம், சஞ்சீவி, வில்வமரத்தடி மண் ஆகியவற்றைக் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

தைலபாத்திரம் ஏந்தி இறைவருடன் அம்பிகை உயிர்களின் நோய் நீக்க வந்தமையால் தைலாம்பாள் என்பது அன்னையின் திருப்பெயர் ஆகும்.

வைத்தியநாதரையும், தைலாம்பிகையையும் வழிபட்டால் பக்தர்களுக்கு மருந்து உருண்டை இத்திருக்கோயிலில் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. இது சருவரோக நிவாரணி ஆகும்.

இதனை உட்கொண்டு, இத்திருக்கோயிலில் அமைந்துள்ள சித்தாமிர்தத் திருக்குளத்து நீரைப் பருகினால் தீரா வியாதிகளும் தீர்தல் திண்ணமாகும்.

அறுபது இலட்சம் அரசர்களும் இரண்டு யோசனை தூரம் நடந்துபோய் கண்ணபெருமானை எதிர் கொண்டு வரவேற்கிறார்கள்.

தம்மை எதிர்கொண்டு வரவேற்கும் மன்னர்களையெல்லாம் அருள்பொங்கப் பார்த்து, வரவேற்பினை ஏற்றுக்கொள்ளும் கண்ணபெருமான் அத்தினாபுரிக்குள் அடியெடுத்து வைக்கிறார்.

ஆனால் மன்னன் துரியோதனனின் அரண்மனைக்குச் செல்லாமல், அறிவிலே சிறந்த விதுரர் வாழ்கின்ற மனைக்கு அவருடைய விருந்தாளியாக அவரும் எதிர் பாராமலே கண்ண பெருமான் செல்கிறார் என்றால் அதற்குக் காரணம் இல்லாமலா இருக்கும்?

கண்ணன் தூது தருமரின் விருப்பப்படி சமாதானத்தால் நாடு பெறுவதற்காக அல்ல. கண்ணனின் எண்ணப்படி யாவரையும் நீறாக்கிப் பூபாரத்தைத் தீர்க்கும் பொருட்டுத்தான். பாஞ்சாலியின் அவிழ்ந்த கூந்தலை அழகுபடுத்தி முடிந்து வைப்பதற்குத்தான் என்று முன் இதழில் குறிப்பிடப்பட்டது அல்லவா!

அதன் பொருட்டே, அத்தினாபுரி நுழையும் கண்ண பெருமான் துரியோதனனின் அரண்மனைக்கு நேரே செல்லாமல் விதுரர் மனைக்கு செல்கின்றார் என்பதை இன்னும் சற்று நேரத்தில் நீங்களும் தெரிந்து கொள்ளலாம்.

கண்ணபெருமான் தம் மனைக்கு விருந்தாக வந்ததனால் விதுரர் கொள்ளும் மன மகிழ்விற்கு அளவே இல்லை. கண்ணபெருமானின் திருவடி மலர்களைப் பலமுறையும் தம் தலைகளால் சூடிக்கொள்ளும் விதுரர் ஆனந்த மிகுதியால் துள்ளிக்குதிப்பதோடு, கண்களால் கண்ணனைக் கண்ட யான் பிறப்பினைத் தொலைத்தேன். வீடுபேறும் கொண்டேன். இனி பெறத்தக்கதாம் பேறு ஒன்றும் இல்லை' என்பதாகப் பெருமிதமும் கொண்டு மகிழ்கின்றார்.

*முன்னமே துயின்றருளிய முதுபயோ ததியோ?*
*பன்னகாதிபப் பாயலோ?*
*பச்சையாலிலையோ?*
*சொன்ன நால்வகைச் சுருதியோ?*
*கருதிநீயெய்துதற்கு*
*என்னமாதவஞ் செய்ததிச் சிறுகுடில்?*
(கிருட்டிணன் தூது 80)

என்று வியந்து வினவிப் போற்றுகிறார்.

இதுவரை வெறும் குடிசையாக இருந்த தம்மனை கண்ணபெருமான் எழுந்தருளப் பெற்றதால் திருப்பாற்கடல் போலவும், ஆதிசேஷனாகிய திருப்பள்ளி மெத்தை போலவும், ஊழிக்காலத்தில் உலகம் அழியும்போது திருமால் குழந்தை வடிவில் துயில் கொள்ளும் பச்சை ஆலிலை போலவும், நால்வகை வேதம் போலவும் பெருமை பெற்று விளங்குவதை எடுத்துக்கூறி மகிழும் விதுரர், தேவாமிர்தம் போன்ற அறுசுவை விருந்தை அண்டர்நாயகனுக்கு ஆக்கிப் படைத்து மகிழ்கின்றார்.

பயணக்களைப்புடன் பசிக்களைப்பும் நீங்கப் பெற்ற பரந்தாமனாகிய கண்ணபெருமான் இரத்தின சிங்காசனத்தில் அமர்ந்திருக்க, புண்ணிய விதுரர் அவரைப்போற்றி, அத்தினாபுரிக்கு எழுந்தருளிய காரணத்தை எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்.

பஞ்ச பாண்டவர்களுக்காக நாடுகேட்டுத்தாம் தூது வந்ததாகக் கண்ணபெருமானும் காரணத்தை தெரிவிக்க துரியோதனனின் துர்க்குணத்தை அறிந்திருப்பவராகியவிதுரர் 'நிமலரே'! நீதி நீர் எடுத்துரைத்தபோதும் கொடியன் நாடுவழங்கான்! போர் செய்து வாட்டினால் அன்றி துரியோதனனுக்கு அறிவு வராது" என்று கண்ணபிரானிடம் கூறுகிறார்.

## மகப்பேறு வேண்டுமா? முக்குளநீர் ஆடுவீர்!

திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேசுவரர் திருக்கோயிலில் சூரியதீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் எனும் முக்குளங்கள் உள்ளன.

இம் முக்குளத் தீர்த்தங்களில் நீராடி இறைவரை வழிபட்டால் பிள்ளை வரம் பெறலாம். நினைத்த செயல் கைகூடும், பிடித்தபேய் பிசாசுகள் விலகிவிடும்.

இதனைத் திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தில்

**"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு**
**ஆயினவே வரம் பெறுவர், ஐயுறவேண்டா ஒன்றும்**
**வேயனதோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர்**
**தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே"**

என்று பாடியுள்ளார்.

இம் முக்குளநீரில் ஆடிய புண்ணிய பயன் காரணமாகவே நெடிதுகாலம் பிள்ளை இல்லாது வாடிய அச்சுத களப்பாளர் என்பவருக்கு மெய்கண்ட தேவர் குழந்தையாகப் பிறந்து சைவ சித்தாந்தத் தலைமணிநூலாம் "சிவஞான போதத்தைப்" பாடியருளினரர் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் நடப்பது உறுதி என்பதை தெளிவுபட தெரிந்திருப்பவராகிய கண்ணபெருமானும் "துரியோதனின் வாய்வழியாக மூளை வெளியே வரும் வண்ணம் நடக்கத்தான் போகிறது வெம்போர்" என்று கூறுகிறார். பின் விதுரர்க்கு விடை கொடுத்து மலர்ப்படுக்கையின் மீது, நாளை நடப்பதையும் முன்னமே அறிந்தவராய் மாயக்கண்ணன் அமைதியாக உறங்கலாயினார்.

மறுநாள் காலை கண்ணபெருமான் துரியோதனன் அவையை நோக்கிப் புறப்பட்டார். அதே நேரத்தில் தம் அரசவைக்கும் வரும் கண்ண பெருமானை அவமதிக்க வேண்டும் என சகுனியுடன் ஆலோசனை செய்து கொண்டிருந்தான் துரியோதனன்.

தமக்கு அடங்கிய சிற்றரசர்களை எல்லாம் ஆணவத்துடன் துரியோதனன் நோக்கி "பாண்டவர்களின் தூதுவனாக வரும் இடையன், நம் அரசவைக்குள் நுழையும்போது எவரும் எதிர்கொண்டோ அல்லது எழுந்து நின்றோ மரியாதை தரக்கூடாது. மீறிச் செய்வீர்களேயானால் உங்கள் ஊர்களை எல்லாம் தீயிட்டுக் கொளுத்தி விடுவேன்" என்று அதிகார மமதையில் ஆணை பிறப்பிக்கலானான்.

விதிவலியாற் கெடுமதிக்கண் நல்லது தோன்றாதல்லவா? ஆகவேதான் துரியோதனனுக்குக் கெட்ட நினைவே தோன்றுகிறது. 'இடையன்' என இறைவனையே பழித்துக் கூறிப் பாதகஞ்செய்யவும் முற்பட்டுவிடுகிறான் அவன்.

ஆனால் அவன் பிறப்பித்த ஆணை நீர்மேல் எழுத்தாய் நொடி நேரத்தில் மறைந்து போவதை அவனே கண்டு மனம் புழுங்க நேரிடுகிறது!

ஆம்! கண்ணபெருமான் அரசவையில் கால் எடுத்து வைத்தவுடன், வீடுமர், துரோணர், விதுரர் மற்றும் அந்த அவையில் இருக்கும் அரசர்கள் எல்லாருமே எதிர்சென்று வணங்கி கண்ணனை வரவேற்கலாயினர். துரியோதனனும், சகுனியும், செஞ்சோற்றுக் கடனுக்காய் நெறி மறந்த கர்ணனும் ஆகிய மூவர் மட்டுமே கண்ணனை வணங்காதவர்கள்.

கண்ணபெருமான் தமக்குரிய ஆசனத்தில் போய் அமர்ந்து கொள்கிறார். அவரைத் துரியோதனன் வினவும் முதல்வினாவே இதுதான்:

"நேற்றே அத்தினாபுரிக்கு வந்துவிட்ட நீ, எதற்காக என் மனைக்கு வராமல், விதுரன் மனையில் தங்கினாய்?"

இந்தக் கேள்வியைத் துரியோதனன் கேட்க வேண்டும் என்பதற்காகத்தானே திட்டமிட்டுக் கண்ணபெருமான் விதுரர் மனைக்குப் போய் தங்கினார். அவருக்குத் துரியோதனன் கேட்ட கேள்வி மிகுந்த மகிழ்ச்சியையே அளித்தது.

இருந்தாலும் தாம் விதுரர் மனையில் தங்கியதற்குக் காரணம் எதுவும் இல்லை என்பதைப் போல 'எனக்கு எல்லா மனைகளுமே ஒன்று போலத் தான். அத்தினாபுரியில் இருக்கும் இந்த உன்மனை, என் மனை. துவாரகையில் இருக்கும் என் மனை, உன் மனை. எனக்கு எந்த பேதமும் இல்லை.'

"விதுரர் மனையையும், என் மனைபோல் எண்ணித் தங்கினேன். மேலும் விதுரர் என்னை எதிர்கொண்டு வந்து வரவேற்ற பெருந்தன்மையை மதித்தும், விதுரர் மனையில் தங்கினேன்."

"இவை மட்டுமல்ல, நானோ பாண்டவர்களின் பொருட்டு வந்த தூதுவன். அவர்களுக்குத் தூதுவனாக வந்து விட்டு, உன் வீட்டில் தங்கி உன் உபசாரத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால், அவர்களின் பொருட்டு நீதியை உன்னிடத்தில் எப்படி எடுத்துரைக்க முடியும்? அதனை எண்ணியும் தான் நான் விதுரர் மனையில் தங்கினேன்"

இவ்வாறு விளக்கம் கொடுக்கும் கண்ணபெருமான், நரகத்தில் வாடுதற்கு உரியவர் எவர் எவர் என்பதையும் அப்பொழுது எடுத்துக் கூறுகின்றார்.

"அரவமல்கிய பதாகையாய்! மதியமைச்சராய்
அரசழிப்பினும்
குரவர் நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்த
நன்றியது கொல்லினும்
ஒருவர்வாழ் மனையிலுண்டு பின்னுமவருடன்
உழன்றுபொர உன்னினும்
இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும் இவர்களே
நரகில் எய்துவார்"

(கிருட்டிணன் தூது 109)

"மந்திரிகளாக இருந்து அரசாட்சியைக் கெடுப்பவர், பெரியோர்களின் நல்ல உபதேச

## சங்கு தீர்த்த மகிமை

மார்க்கண்டேயன் இறைவனைத் திரு மஞ்சனமாட்ட பாத்திரம் இல்லையே என்று வருத்தப்பட்டபோது, இறைவர் சங்கினை உற்பத்தி செய்து தந்த திருக்குளமே திருக்கழுக்குன்றத்தில் உள்ள சங்கு தீர்த்தம் ஆகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இக்குளத்தில் சங்கு பிறக்கும் அற்புதம் இன்றும் நிகழ்ந்து வருகின்றது.

மொழிகளைக் கேளாதவர்கள், செய்த நன்றி மறந்தவர்கள், உண்ட வீட்டிற்கே இரண்டகம் நினைப்பவர்கள். இந்த நான்குக் கொடியவர்களே நரகத்தில் உழல்பவர்கள்; இல்லையா துரியோதனா? அப்படியிருக்க உன் வீட்டிலே உண்டு உனக்குத் துரோகம் செய்யலாமா?" என்று துரியோதனனுக்கு கண்ணபெருமான் எடுத்துரைக்கின்றார் பெரியவர்களின் உபதேசங் களைக் கேளாதவனாகிய துரியோதனன் நரகமே அடைவான் என்பதையும் குறிப்பாக அவர் உணர்த்தியது மட்டும் அல்ல. உன் சிறிய தந்தையாயினும் விதுரர் நீதிமானாய் நினக்கு மாறுபட்டவராய் விளங்கும் காரணம் பற்றியே அவருடைய வீட்டிலே நான் தங்கினேன் என்பதையும் சொல்லாமலே சொல்லிவிடும் கண்ணபெருமானின் சொற்சாதுரியத்தையும் தான் இங்குநாம் காணுகின்றோம்.

நரகத்திலே நிச்சயம் இடம் பெறப் போகின்றவனாகிய துரியோதனனுக்கு 'நரகிற்குரியார் யார்?, என்ற கண்ணபெருமானின் உபதேச விளக்கம் இனிக்கவா செய்யும்? இனிக்கவில்லை. அவன் முகம் சுளித்துக் கொள்பவனாகி " சரி சரி வந்த விசயத்தைச் சொல்" என வெடுப்பாகக் கூறுகின்றான். கண்ணபெருமானும்"

**"சூதினால் அரசிழந்து நின் துணைவர்**
**சொன்ன சொல்லும் வழுவாதுபோய்**
**ஏதிலார்களென நொந்து**
**தண்ணிழல்லாத கானிடை யெய்தியும்**
**தீதிலாவகை குறித்தநாள்பல**
**கழித்துவந்தனர் செகத்தினிற்**
**கோதிலாத குருகுலமகிப! அவர்**
**உரிமை நண்பொடு கொடுத்தியே"**

(கிருட்டிணன் தூது. 111)

என்று கூறுகின்றார்.

"பாண்டவர்க்கு உரிமை உடையநாட்டை நட்பொடு கொடுப்பாயாக. கொடுத்தால் உலகோர் உன்னைப் போற்றுவர். இல்லையேல் பழிப்பர்" என அறிவுறுத்துகின்றார் கண்ண பெருமான்.

"முன்னம் பேசியது நரகம் பற்றிய பேச்சு. இப்பொழுது பேசுவது நகரம் பற்றியதும் நாடு பற்றியதுமான பேச்சு. துரியோதனுக்கோ எரிச்சல். எதிர் அமர்ந்திருக்கும் கண்ணன்மேல் வெறுப்பின்மேல் வெறுப்பு.

"யார் பழித்தாலும் என்ன? . யார் திகைத்தாலும் என்ன? சூதாட்டத்தினாலே அன்று நாடு நகரங்களைப் பாண்டவர்கள் இழந்தது இழந்ததுதான். மீளக்கொடுக்க எனக்கேதும் அறிவு மழுங்கிவிடவில்லை. நான் வாக்குறுதி அன்று கொடுத்திருப் பேனேயானாலும், இன்றைக்கு அதைக் காப்பாற்ற வேண்டுமென்று என்னை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. பாண்டவர்கள் மீண்டும் காட்டிற்கே போக வேண்டியதுதான்!

"வேண்டுமானால் என்னுடன் போர் செய்து வலுவிருந்தால் நாட்டை மீட்டுக்கொள்ளட்டும். ஒரு ஈ அமரும் இடம் கூட அவர்களுக்கு நான் கொடுக்க மாட்டேன்" என்பதாகத் துரியோதனன் சினந்து கண்ண பெருமானை நோக்கிக் கூறுகின்றான்.

**"நீ வெறுக்கிலென்? இருந்தமன்னவர்**
**திகைக்கிலென்? பல நினைக்கிலென்?**
**போய் நகைக்கிலென்?**
**உரைத்தவுண்மைமொழி**
**பொய்த்ததென்று அமரர் புகலிலென்?**
**வேய்மலர்த்தொடையல் ஐவர் என்னுடன்**
**மிகைத்து வெஞ்சமர் விளைக்கிலென்?**
**ஈயிருக்கும் இடமெனினும் இப்புவியில்**
**யானவர்க்கு அரசினிக்கொடேன்"**

(கிருட்டிணன் தூது. 114)

துரியோதனன் இப்படித்தான் சொல்வான் என்பது கண்ணபெருமானுக்குத் தெரிந்திருக்கும் உண்மைதான். ஆனால் தூதுவனாய் நடிக்க வந்த வேடத்தில் நல்லபடி முழுவதும் நடித்துவிட வேண்டும் அல்லவா! ஆகவே துரியோதனனை வேண்டுகிறார்.

"பாண்டவர்களிடம் சூதினால் கவர்ந்து கொண்ட நாட்டின் உரிமையை முழுமையாகத் தர மனம் இல்லாவிட்டாலும் பாதியாவது வழங்கு; பாதி வழங்க உனக்கு மனம் இல்லையா? பரவாயில்லை. ஐந்து ஊர்களையாவது வழங்கு என்று துரியோதனனிடம் கெஞ்சி இரக்கின்றார். யார் அவர்? எத்தனைச் சிறப்புக்கொண்டவர்? இந்த உலகங்கள் அனைத்தையும் உலக உயிர்கள் எல்லாவற்றையும் படைத்தருளும் உந்தியை உடையவராகிய கண்ணபெருமான்.

அதற்குத் துரியோதனன் என்ன பதில் சொல்கின்றான்!

"காட்டிலே நேற்றுவரை அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களுக்கு ஐந்து ஊர் கொடுத்தால் வேண்டாம் என்றா மறுக்கப் போகிறார்கள்! ஊர் நான் தர முடியாது என்று ஐந்து வீடுகளைத் தருவேனேயானால் அவ்வீட்டையும் அவர்கள் என்ன மறுக்கவா போகிறார்கள்? அவர்கள் எது கொடுத்தாலும் ஏற்பார்கள். ஆனால் நானோ எதையுமே கொடுக்க மாட்டேன். போகட்டும் அவர்கள் மீண்டும் வனத்திற்கே" என்று இறுமாப்புடன் துரியோதனன் பேசுகின்றான்.

கண்ணபெருமான் ஆணவத்தின் உச்சிக்கே போய்விட்ட அவனுக்குத் தம் அருள்மனம் மாறாது அறிவுரை கூறிகின்றார். அந்தப் பாடல் வீடுமரின் பெருமை கூறும் வீறு மிக்கபாடல்.

**"தந்தைகாதலுறு தன்மைகண்டிளைய**
**தாய்பயந்த இரு தம்பியர்க்கு**
**இந்தவாழ்வும் அரசும் கொடுத்தவனும்**
**நின்குலத் தொருவன் இங்குளான்**
**முந்தமா நிலமனைத்தினுக்கும் உயர்**
**முறைமையால் உரிய அரசருக்கு**
**ஐந்துமாநகரும் நீ கொடாதொழியின்**
**என்னதாகும் உனதரசியல் ?"**

*(கிருட்டிணன் தூது 117)*

பாண்டவர்க்கும், துரியோதனாதியர்க்கும் பாட்டனார் ஆகிய வீடுமர், சந்தனுமா மன்னனுக்கும், கங்கைக்கும் பிறந்த குருகுலச் சான்றோர். கங்கை மறைந்தவுடன் சந்தனுமா மன்னன் செம்படவர் குலத்தில் தோன்றிய பரிமளகந்தி எனும் பாவையைக் கண்டு மனம் பறிகொடுத்தார்.

பரிமளகந்தியின் தந்தையோ பரிமளகந்தியின் வயிற்றில் பிறக்கும் மக்களுக்கே அரச உரிமை தருவதாக உறுதி கூறினால் தான் பரிமளகந்தியை மணம் முடித்துத் தருவேன் என்றான்.

கங்கையின் மைந்தனாகிய தேவ விரதனுக்குத் துரோகம் இழைக்க விரும்பாத சந்தனு, அத்தகைய உறுதிமொழியைத் தரத் துணியவில்லை.

நடந்ததெல்லாம் அறிந்துகொண்ட தேவவிரதன் "நான் இப்பிறவியில் திருமணமே செய்து கொள்ளமாட்டேன். அரசுரிமையை என் சிற்றன்னையின் மக்களுக்கே உரிமை ஆக்குவேன். இது உறுதி" என யாவரும் அஞ்சத்தக்க விரதம் பூண்ட காரணத்தினாலே

"பயங்கரமான விரதம் உடையவன்" என்ற பொருள் படும் 'வீடுமன்' என்ற காரணப் பெயரையும் கொண்டு தமக்குரிய அரசைத் தியாகம் செய்த தியாகசீலராய் வாழ்ந்துகொணடிருக்கிறார்.

இத்தகைய அவருடைய தியாகத்தை அவையறிய எடுத்துக் கூறிப் பாராட்டும் கண்ணபெருமான் 'அப்படிப்பட்ட உத்தமரும் இங்கிருக்க, உரிமையுடைய அரசை உரியவர்க்குத்தர மறுக்கும் நீயும் இருக்கிறாயே! என்னே உன் நீதி! என்று இடித்துக் கூற, துரியோதனன் மேலும் கோபத்தில் கண்களில் நெருப்புப் பொறி பறக்க "நாடு வீரர்களின் உரிமை. வீரமிருந்தால் பாண்டவர்கள் போர்செய்து பெற்றுக் கொள்ளட்டும்" என்று கடுமையாகக் கூறுகிறான்.

**28 ஆகமக் கோயில் உள்ள திருத்தலம்**

காசியைவிடவும் வீசம் பெரியது எனப் போற்றப்படும் விருத்தாசலம் அருள்மிகு பழமலை நாதர் திருக்கோயிலில் 28 ஆகமக் கோயில் உள்ளது.

முருகப்பெருமான் 28 ஆகமங்களையும் சிவலிங்கங்களாக பூசித்துள்ளார்.

காமிகேசுவரர் முதலாக வாதுளேசர் ஈறாக 28 ஆகமங்களின் பெயர்களை இங்குள்ள சிவலிங்கங்கள் பெற்றுள்ளன.

முன்பு இதே துரியோதனன் "பன்னிரண்டு ஆண்டு வன வாழ்வும், ஓராண்டுக் காலக்கரந்துரை வாழ்வும் முடித்து வந்தால் நாட்டை மீள நல்குகிறேன்" என உறுதி கூறியவன் தான்.

இப்பொழுதோ "போர் செய்து பெற்றுக்கொள்ளட்டும்" என்கிறான். பின்னால் இந்த மொழியும் பொய்யாகப் போருக்கும் வரமாட்டேன் என்று கூறிவிட்டால் என்ன செய்வது?" என்று எண்ணியவராகக் கண்ணபெருமான்" சரி அவர்கள் போர் செய்தே அவர்களுக்கு உரிமை உடைய நாட்டைப் பெற்றுக் கொள்வார்கள். அவர்களுடன் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் போர்நிகழ்த்த நிச்சயம் இசைகிறேன் எனக் கையிலடித்துச் சத்தியம் செய்" என்று துரியோதனனிடம் கேட்டுத்தம் கையை நீட்டுகின்றார்.

துரியோதனனோ கண்ணனின் கைமேல் கையடித்துச் சத்தியம் செய்து தராமல், எதிர் இருக்கும் தூணைக் கோபத்துடன் கையினால் அறைந்தவனாய் கடும் வார்த்தைகளால் கண்ணனை வசைபாடுகின்றான்.

"இடையர்களோடு காட்டிலே மாட்டு மந்தைகளை மேய்த்துத் திரிந்தவனாகிய நீயா அரசர்களுக்கு அரசனாகிய என்னைக் கையடித்துச் சத்தியம் செய்து தரச்சொல்லுகிறாய்?"

"அன்றைக்குப் பாஞ்சாலியைத் துகில் உரிந்து அவமானப்படுத்தியபோது, ஒன்றும் செய்யமுடியாமல் பக்கத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாண்டவர்களுக்கு மானம் வேறு இருக்கிறதா?"

"நான் அதற்குக் கையிலடித்துச் சத்தியம் செய்து தரவேண்டுமா? பாண்டவர்களா எனக்குச் சரி நிகரானவர்கள்? அவர்களுக்குத் தாயார் இருவர். தந்தைமார் ஐவர். தாரமோ ஒருத்தி. அப்படிப்பட்டவர்களா எனக்கு ஈடு! நான் கையிலடித்து சத்தியம் செய்து தரவேண்டுமா? என்று துரியோதனன் கடுமையான மொழிகளால் பாண்டவர் களையும், பாண்டவர்களின் தூதுவனையும் பழித்து பேசிக்கொண்டே செல்லும்போது, கண்ணபெருமான் எதிர் ஒன்றும் பேசவில்லை. உள்ளுக்குள் சிரித்துக் கொள்கின்றார்.

தாம் கருதிய போர் இனி நலமாக முடியும் என்று தமக்குத் தாமே சொல்லிக்கொள்கின்றார். தாம் இனியும் அங்கிருக்கத் தேவையில்லை என்பதாக எழுந்து விதுரர் வீட்டிற்கே திரும்பிவிடுகின்றார்,

**"சீலமற்றவர் சினந்த போது ஒரு தீதிலாதவர் செயிர்ப்பரோ?"** என வில்லிப்புத்தூராழ்வார், கண்ணனின் கனிவுக்கு நியாயம் கற்பிப்பதை இங்கு காண்கிறோம்.

கண்ணபெருமான் அவையைவிட்டு வெளியேறியதும், துரியோதனனின் கோபம் கண்ணபெருமானைத் தம் வீட்டில்தங்க வைத்து உபசரித்த விதுரர் மேல் திரும்புகிறது.

"கண்ணனுக்கு ஏன் நீ விருந்து வைத்தாய்? என் இராச்சியத்தைப் பாண்டவர்கள் பறித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் தானே! என் உப்பைத் தின்றுவிட்டு எனக்கே துரோகம் புரிகிறாயே!" என்று அவையில் பல மன்னர்கள் முன்னர் விதுரரைச் சாடும் துரியோதனன், அவருடைய பிறப்பையும் இழித்துக் கூறி

"முதல்விழைந் தொருவனுடன் இயைந்த
பொருள் பற்றி இன்புற முயங்கினும்
அதிகமென்ற பொருள் ஒருவன்வேறுதரின்
அவனையே ஒழிய அறிவரோ?
பொதுமடந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமையல்ல அவர் புதல்வனாம்
விதுரன் இன்றவனொடு உறவு
கொண்டதோர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே"

*(கிருட்டிணன் தூது. 128)*

எனப்பேசுகின்றான்.

பொதுமடந்தையின் வயிற்றில் பிறந்ததனால் விதுரர்க்குப் பொதுமடந்தையின் புத்தியே இருப்பதாக தகாதவார்த்தைகளால் துரியோதனன் பேசி ஏச, தாங்கமுடியாத கோபத்தில் எழுகிறார் விதுரர்.

"என் பிறப்பைப் பழித்த உன்வாயை வாள்கொண்டு அறுத்து, உன் தலையையும் கொய்துவிடுவேன். ஆனால் குருகுலத்தில் மகனையே ஒரு தந்தை கொன்றுவிட்டான். என்று வையத்தவரும், வானத்தவரும் பழிப்பார்களே என்பதனால் அவ்வாறு செய்யாமல் விடுகிறேன்."

"பாண்டவர்க்கு தூதாக வந்த கண்ணபெருமானுக்கு விருந்திட்டேன் என்பதனால் என்னைப் பழிகூறுகிறாய்! நேர்மையில் சிறந்தவர்களாகிய பாண்டவர்களுக்கே நான் துணையும் ஆவேனேயானால் என்னை யார் பழித்துக்கூற முடியும்" என்று அவனையே திருப்பிக்கேட்கும் விதுரர், பாண்டவர்க்குத் தாம் துணையாயினும் பார்பழிக்காது என்பதை அறிந்திருந்தும், துரியோதனனின் உப்பை உண்ட அந்த செஞ்சோற்றுக் கடனால் அவ்வாறு செய்ய எண்ணாது, தம்முடைய மிகச் சிறந்த வில்லாற்றல், கொடியவன் துரியோதனனுக்கு இனிப் பயன்படாமல் போகட்டும் என்பதாக முடிவுசெய்து,

**"சொல்லிரண்டு புகலேன் இனிச் சமரில் நின்று**
**வெங்கணை தொடேன்"**

*(கிருட்டிணன் தூது 131)*

என்பதாகக் கூறித் தம் கையில் இருக்கும் திருமாலின் வில்லைவெட்டிக்கீழே எறிந்துவிட்டு அவைக்களத்தை விட்டுவேகமாகச் சென்று விடுகிறார்.

(தொடரும்)

## இறைவன் எங்கே இல்லை?

"*God is Nowhere?*" என்று தன் வீட்டுமுன் நாத்திகன் ஒருவன் பலகையில் எழுதி வைத்து இருந்தான். அவன் அருளால் அவன் இருக்கும் உண்மையைப் பின் தெளிந்து கொண்டான்.
"*God is now here*" என அதைத் திரும்ப எழுதி வைத்தான். எழுத்துக்கள் அப்படியே இருக்க பொருள் மட்டும் புதுப் பொருள் தந்தது.
ஆகவே இறைவன் எங்கும் இல்லை என்பது அறியாமை. இறைவன் எங்கும் உள்ளான் என்பதே பகுத்தறிவு ஆகும்.

# WATERFALL ESTATES

**ANAMALLAI HILLS**
**VALPARAI**

*For Extra Strength & Satisfaction*
*DRINK*

## WATERFALL PREMIUM TEA
## WATERFALL AMRIT - Non RC
## WATERFALL SUPERSTAR
**DUST TEA (ASSAM BLEND)**

***Waterfall Tea is a tribute to your Taste***

**WATERFALL ESTATE (EAST) PRIVATE LIMITED**
**WATERFALL ESTATE (WEST) PRIVATE LIMITED**
**WATERFALL MARKETING COMPANY**
No: 68(New), Cathedral Road
Gopalapuram, Chennai - 600 086.

Phone: 044 – 28114358
044 - 28114359


Fax: 044 - 28114237

E-mail: waterfall_ho@sify.com

சரஸ்வதியும், இலக்குமியும் கல்வி, செல்வம் இதில் எது சிறந்ததென இந்திரனிடம் கேட்ட போது, இந்திரன் செல்வமே சிறந்தது என இலக்குமிக்கு ஆதரவாகக் கூறவே, கோபமுற்ற சரஸ்வதி இந்திரனை மதம் கொண்ட யானையாகிடுமாறு சபித்தாள்.

இலக்குமி இந்திரனை சத்தியவிரத க்ஷேத்திரம் என்றழைக்கபடும் காஞ்சி மாநகருக்குச் சென்று வரதராஜ பெருமாளைச் சரணடைந்து சாப விமோசனம் பெற்றிட தெரிவித்தாள்.

யானையான இந்திரன் நரசிம்ம மூர்த்தியை காஞ்சி தலத்தில் தியானித்து வருகையில் இந்திரனின் இதயத்திலிருந்து வெளிப்பட்டு சாபவிமோசனம் அளித்தார். நரசிம்மர் இந்திரனின் இதயத்தில் தாம் இருந்த இடத்தை குகையாக்கி யானையின் உடலை மலையாக்கி அமைத்தாலேயே இத்திருக்கோயிலில் வரதராஜர் சன்னதி அமைந்த இடம் குன்றின் மீதும், அக்குன்றின் கீழே உள்ள குகையில் அருள்மிகு நரசிம்மரும் எழுந்தருளுவதாக அமைந்துள்ளது.



# காணக் கண்கோடி வேண்டும்

# காஞ்சி கருட சேவை

அத்தி(யானை)யால் கிரி (மலை) உண்டாகியதால் 'அத்திகிரி' என்று அழைக்கப்படும் இத்திருக்கோயிலில் குன்றின்மேல் எழுந்தருளி உள்ள வரதராஜர் 'அத்திகிரிநாதர்' என்றழைக்கப் படுகிறார்.

ஹேமன், சுக்கிலன் எனும் இரு சிறுவர்கள் கொங்கண தேசத்தில் கௌதம முனிவரிடம் சீடராய் இருந்து விஷ்ணு பூஜைக்கு புனித நீரும் யாகசாலை சமித்துகளும் (மரக்குச்சிகள்) சேகரித்து வரும்போது மூடாமல் இருந்த புனித நீர் பாத்திரத்திலிருந்து எதிர்பாராது பல்லி ஒன்று துள்ளிக் குதித்து வெளியேறியது. இச்சீடர்களின் குரு இப்புனிதக் குறைவை வெகுண்டு அவர்களது கவனக்குறைவுக்காக் இருவரையும் பல்லிகளாகப் போகுமாறு சபித்துவிட்டார். காஞ்சிபுரம் சென்று அருள்மிகு வரதராஜரை தியானித்து சாபவிமோசனம் பெறவும் தெரிவித்தார். அவர்களிருவரும் இந்திரன் சாபவிமோசனம் பெற்றபோது இந்திரனின் யானை தன் துதிக்கையால் அங்கிருந்த மரத்தை உலுக்கவே பல்லிகளிரண்டும் வீசியெறியப்பட்டு இந்திரனின் திருமேனியில்பட்டு பூர்வ உருவைப் பெற்று சாபவிமோசனம் அடைந்தனர்.

இந்நிகழ்ச்சியின் நினைவாக இந்திரனின் வரத்தால் இத்திருத்தலம் பல்லி தோஷம் போன்ற பல தோஷங்களையும்

நிவர்த்திக்கும் விசேடமுடையதாக விளங்கி வருகிறது. இத்திருக்கோயிலின் அத்திகிரியில் உள்ள யோக நரசிம்மரை தரிசித்து, அத்திகிரி மலையேறி அத்திகிரிநாதன் அருள்மிகு வரதராஜரையும் தரிசித்தபின் சன்னதியின் பின்புறம் உள்ள தங்க, வெள்ளியிலான இரு பல்லிகளைத் தம் கரங்களால் தொட்டு வணங்குவதன் மூலம் எவரொருவரும் ஏகாதசியில் அகோராத்ரம் இரவுபகல் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்வதால் கிடைக்கும் விரத பலனை அடைவதோடு தோஷங்கள் நீங்கப்பெறுகின்றனர்.

சரஸ்வதியும், இலக்குமியும் கல்விக்கும் செல்வத்துக்கும் நடத்திய போட்டியில் இலக்குமி சிறந்தவளென இந்திரன் தீர்ப்பளித்தான். இந்திரனை சபித்து சரஸ்வதி, பிரம்மாவிடம் மீண்டும் முறையிட்டபோது, பிரம்மாவும் இலக்குமியை ஆதரித்தார். பிரம்மாவையும் சரஸ்வதி சபித்து அவனிடமிருந்து திருமாலினால் வழங்கப்பட்ட சிருஷ்டி தண்டத்தை ஒளித்ததால் உலக இயக்கம் தடைப்படவே திருமாலை நோக்கி பிரம்மா தவம் செய்தார். ஆயிரம் அசுவமேதயாகம் செய்தால் அவருக்கு வரதராஜராக வந்து அருளி சிருஷ்டி தண்டத்தை அளிப்பதாகத் திருமால் வரமளித்தார். அசுவமேதயாகம் எனும் பரி வேள்வி ஆயிரம் நடத்துவது மிகக் கடினம் என்பதால் சுலபமாக ஆயிரம் அசுவ மேதயாகத்தை மேற்கொள்ளும் வழியை விளக்குமாறு திருமாலை வேண்டினார். அவரும் காஞ்சிபுரம் எனும் சத்திய விரத க்ஷேத்திரத்தில் ஒரு முறை செய்யும் அசுவமேதயாகம் ஆயிரம் முறை செய்த பலனைத் தரும் எனத் தெரிவித்தார். பிரம்மா காஞ்சியில் அத்திகிரிக்கு மேற்கே யோக நரசிம்மர் முன்பு குண்டம் அமைத்து வேள்வியைத் தொடங்கினார். இச்செய்தியறிந்த சரஸ்வதி கோபமுற்று யாகத்தைத் தடுக்குமாறு நெருப்புக் கோளத்தை ஏவினார். அத்தீக்கோளத்தை தமது ஒரு கையினால் ஏந்தியருளிய திருமால் 'தீபப்பிகாசர்' எனப் பெயர் பெற்றார்.

பிரம்மாவின் யாகத்தை திருமால் காத்தருளி பூர்ணாகுதி நிறைவேறியது. அந்த ஹோம குண்டத்திலிருந்து மகா விஷ்ணு வரம் தரும் ராஜனாக தோன்றியருளினார். இவ்வாறு




ஈசருடன் ஞானமொழி பேசும் தகப்பன் சுவாமி - இவ்வற்புதப் பஞ்சலோக விக்ரகத்தைத் திருப்போரூர் முருகர் ஆலயத்தில் கண்டு வணங்கலாம்.

யாக குண்டத்திலிருந்து நெருப்பினிலிருந்து எழுந்தருளிய திருமேனி என்பதால்தான், இப்பெருமாளின் உத்சவர் உலோகத் திருமேனி மிகுந்த தீக்காயத்துடன் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. பிரம்மாவின் யாகத்துக்குப்பின் இத்தலத்தில் எழுந்தருளும் பேரருளாளன் வரதராஜனுக்கு அவர் எழுந்தருளும் அத்திகிரி எனும் குன்றிற்கு இருபத்து நான்கு படிகள் அமைத்து சன்னதி எழுப்பி புண்ணியகோடி விமானம் என்பதையும் நிறுவி இரண்டு பல்லிகளுக்கான முத்திரையையும் பதித்து ஆலயத்தை தேவேந்திரன் அமைத்ததாகக் கூறுவர்.

கச்சி வரதர், அத்தி வரதர், என்றழைக்கப்படும் இப்பெருமாளுக்கு இன்னும் உள்ள திருநாமங்கள் உறஸ்திகிரிநாதன். திரு அத்தி ஊரான், தேவராஜன், தேவாதிராஜன், வரதராஜன், பேரருளாளன், தவப்பெருமாள், ப்ரணதார்த்திகரன் (தன்னை அண்டியவர்களின் துயர் தீர்த்து

ஆட்கொள்ளும் கருணை படைத்தவன்) ஆகும்.

அத்திகிரி, அஸ்திகிரி என்று சன்னதி அமைவிடத்திற்கு பெயர் என்றாலும் அத்திகிரிநாதர். அத்திவரதர் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. முன்னர் இத்தலத்தில் மூலவர் விக்கிரகமானது அத்தி மரத்தால் செய்யப்பட்டு வழிபாட்டில் பல நூறு ஆண்டுகள் இருந்தது என்றும் பின்னால் சிலாரூபமாய் அமைக்கப்பட்ட பின் ஆகமப்படி அத்திவரதர் இத்திருக்கோயிலின் அனந்தசரஸ் என்னும் திருக்குளத்தில் தனியே ஒரு அறையில் நீருக்கடியே நிரந்தரமாக எழுந்தருளச் செய்யப்பட்டார் என்றாலும் 40 அல்லது 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த பழைய மூர்த்தியான அத்திவரதரை மக்கள் தங்கள் வாழ்நாளில் கண்டு தரிசிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இறுதியாக 1979 ஆம் ஆண்டு அத்தி வரதர் எழுந்தருளி இவ்வாலயத்தின் வசந்த மண்டபத்தில் ஒரு மண்டல காலம் பக்தர்களுக்கு சேவை சாதித்தார். அவ்வமயம் முன்னாள் உடுத்தப்பட்ட வஸ்திரங்களும் மரத்திருமேனியும் கூட சேதமுறாமல் இருந்த ஆச்சரியத்தை காணும் பேறுபெற்றவர் பல்லாயிரமாவர்.



வரதராஜபெருமாள் கோவில் பஞ்சபிரகாரங்கள் என்னும் 5 திருச்சுற்றுகளுக்கு நடுவே சிறு குன்றாக உள்ளது. இராஜகோபுரத்தினின்று உள்ளே செல்லும் போது இடது புறம் அத்திவரதர் அறிதுயில் கொள்ளும் அனந்த சரஸ்புஸ்கரணி என்னும் திருக்குளம் உள்ளது. இக்குளக்கரையில் அரங்கநாதர் சன்னதி இராமபிரான் சன்னதியோடு சுதர்சன் ஆழ்வார் எனப்படும் மிகப்பெரிய சக்கரத்தாழ்வார் சன்னதியும் உண்டு. இத்திருச்சுற்றில் நம்மாழ்வார், மதுரகவிகள், நாதமுனி, மணவாள மாமுனிகள், உடையவர் ராமானுஜர் சன்னதிகள் முக்கியமாவை. இத்திருக்கோயிலுக்கு தம்மை அர்ப்பணித்துக்கொண்ட தாத்தாச்சரியார் என்பவருக்கு வாகன மண்டபத்தை ஒட்டி சன்னதி ஒன்று உண்டு.


இரண்டாம் திருச்சுற்றில் திருவனந் தாழ்வான் கரிய மாணிக்க வரதர் சன்னதிகள் உள்ளன. மூன்றாம் திருச்சுற்றில் ஆண்டாள், இராமர், சேனைமுதல்வர், மலையாள நாச்சியார் பெருந்தேவித்தாயார், குஹநரசிம்மர் எனப்படும் அழகிய சிங்கர் வலம்புரி விநாயகர் சன்னதிகள் உள்ளன. இங்குள்ள தன்வந்திரி சன்னதி நோய்தீர்க்கும் பிரார்த்தனை அபிஷேகங்களுக்கு பெயர் பெற்றது. நான்காவது பிரகாரமானது குன்றில் வரதராஜ சன்னதியைச் சுற்றி அமைந்துள்ளது. இங்கே தங்கப்பல்லி, வெள்ளிப்பல்லி மற்றும் சூரிய சந்திரர் பிம்பங்கள் சிறப்பாக பக்தர்கள் படியேறிச் சென்று தொட்டுச் செல்லும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மத்தியில் அமைந்த வரதராஜர் மேற்கே திருமுகம் காட்டி அருளுகிறார். காஞ்சியில் 'கருடசேவை' அரசாங்கத்தால் பல காலமாக 'அறிவிக்கப்பட்ட' உலகளாவிய விழாக்களுள் ஒன்று. சோளங்கிபுரம் தொட்டாச்சாரியார் அங்கிருந்த படியே கருடசேவையின் காட்சியைக் காண அருளியதாகவும் அதனாலேயே கருடசேவையின் போது திருக்குடை சில கணங்கள் மறைந்து பின் தரிசனம் தருவதாகவும் கர்ணபரம்பரைச் செய்தி உண்டு.

காஞ்சியில் ஸ்ரீ கருட சேவை 01.06.2004 அன்று மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

## சொர்க்கம் செல்லக்கூடிய தொண்டர்கள் யார்? யார்?

தேவாமிர்தம் கிடைத்தாலும் தனித்து அருந்தாமல் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்போர், உலகம் தருவதாகக் கூறினாலும் தீய காரியங்கள் செய்ய அஞ்சுவார், மரணம் நேரும் என்றாலும் தூய காரியங்கள் செய்ய தயங்காதோர், தமக்கு மட்டுமே பயன்தரக் கூடிய காரியங்களைச் செய்யாமல் பலருக்கும் பயன்படும் நல்ல காரியங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வோர், சோர்விலாமல் பாடுபடும் சான்றோர்களே தொண்டர்கள் ஆவர். இவர்களே இவ்வையத்தை வாழ்விக்கும் சான்றோர்கள், சொர்க்கம் செலத்தக்க தகுதி பெற்றவர்கள் என்பதைக் கீழ்க்காணும் புறநானூற்றுப் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**"உண்டால்அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலர்! முனிவிலர்**
**துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்**
**அன்ன மாட்சி அனையர் ஆகித்**
**தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"**



## நரகம் செல்லக்கூடிய குண்டர்கள யார்? யார்?

நட்புகொண்டு வஞ்சனை செய்வோர், செய்த நன்றி மறந்து தீமைகள் செய்வோர், விரதங்கள் வீண் எனக் கேலிகள் செய்வோர் பெரியோர், பெற்றோரைப் போற்றாமல் பழித்துத் திரிவோர்.

உபகாரம் செய்வோரைப் பழித்துத்திரிவோர் பொய்ச்சத்தியம் புரிந்து சத்தியம் கொல்வோர் வயதில் மூத்தாலும் வாழ்வாசை விடாதார், நீதிகள் அறங்களை நித்தமும் சிதைப்போர், பெண் ஆசை கொண்டோர், கோயிற்சொத்துக் களைக் கவர்வோர் - இவர்கள் யாவரும் குண்டர்கள் ஆவர் என்பது அருணகிநாதர் கருத்தாகும்.

இவர்களுக்கு வாட்டும் நரகம் நிச்சயம் உண்டு என்றும் கூறுகின்றார்.

"தோழமை கொண்டு சலஞ்செய் குண்டர்கள்
ஓதியநன்றி மறந்த குண்டர்கள்
சூழ்விரதங்கள் கடிந்த குண்டர்கள்


பெரியோரைத்
தூஷண நிந்தை பகர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டு தகைந்த குண்டர்கள்
சூளுறவு என்பது ஓழிந்த குண்டர்கள்
தொலையாமல்
வாழநினைந்து வருந்து குண்டர்கள்
நீதியறங்கள் சிதைந்த குண்டர்கள்
மான அகந்தை மிகுந்த குண்டர்கள்
வலையாலே
மாயையில் நின்று வருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள் கவர்ந்த குண்டர்கள்
வாதை நமன்தன் வருந்திடும் குழி
விழுவாரே!"

-வல்லக்கோட்டை திருப்புகழிலிருந்து

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச் செம்மல்

திருமிகு டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)



அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி, மருதமலை.

ஒரு சித்திரைத் திங்கள் சதய நட்சத்திரம் கூடிய திருநாள். திருப்புகலூர் என்னும் திருத்தலத்தில் தேவாரம் பாடிய மூவர் முதலிகளில் ஒருவராகிய திருநாவுக் கரசர் என்ற பட்டம் பெற்று, செந்தமிழில் சொல்வளப் பதிகத் தொடைபாடிய பான்மையால் இறைவனால் "நாவுக்கரசு" என்ற நாமம் சூட்டப்பட்டு, திருஞான சம்பந்தர் பெருமான், முதல் சந்திப்பில், திருவாய் மலர்ந்தருளிய நிலையில் அப்பராகி, தாண்டக வேந்தர் என்றும் புகழ்பெற்ற திருநாவுக்கரசர் பெருமான் திருத்தொண்டு நெறியின் இலக்கியமாகவும், இலக்கணமாகவும் இருந்து, நினைப்பவர்களின் உள்ளங்களில் நிங்காத இடம் பெற்றவராகிவிட்டார் என்பது மறுக்க முடியாத ஒன்று.

அப்பர் பெருமானுடைய வாழ்க்கையின் முற்பகுதியில் அவரைப் பல துன்பங்கள் கடுமையாகத்தாக்கின. சிறு வயதிலேயே தந்தை, தாய் இருவரையும் இழந்தார். தம்தமக்கையார் மணம் முடிப்பதாக இருந்த மணமகனாகிய கலிப்பகையார் போரில் உயிர் துறந்தார்; திலகவதியாரும் உயிர் துறக்கத் துணிந்தார். வாழ்க்கை நிலையாமை என்கிற உணர்வு மருள் நீக்கியாரை வாட்டியது. தமக்கையாரிடம் சென்று, அவர் தனக்காக வாழ வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறார். தமக்கையார் தனது முடிவை மாற்றாவிட்டால், தானும் உயிர் விடும் விருப்பத்தையும் தெரிவிக்கின்றார்.

இந்தக் கட்டத்தில் மருள் நீக்கியார் உலகில் வாழ்ந்து வளர வேண்டுமென்று பெருமான் "புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன் ; பூம்புகலூர் மேவிய புண்ணியனே" எனப் பாடியருளிப் பெறுவதற்கரிய பேறாகிய ஞான வடிவேயாகி, சிவானந்தத்தில் திளைத் தவராக சிவபெருமான் திருவடிக் கீழ் அமர்ந்திருந்தார். இவ்வாறாகவே சேக்கிழார் பெருமான் அப்பரடிகளுடைய திருப்புராணத்தை நிறைவு செய்கிறார்.

இப்பூவுலகிலே மருள் நீக்கியாராகப் பிறந்து. சமண சமயம் சார்ந்து, தரும சேனர்

**சனீஸ்வர பகவான் சுயம்பு திருக்கோயில்**

தேனி மாவட்டத்தில் குச்சனூர் தலத்தில் அருள்மிகு சனீஸ்வரபகவான் தலநாயகனாக மூல மூர்த்தியாக மற்ற தெய்வங்களோடு இணை இல்லாமல் தனிப்பெருந் தெய்வமாக விளங்குகிறார். இம்மூலவர் சுயம்பு மூர்த்தியாவார்.

**அதிக சன்னிதிகள் உள்ள திருக்கோவில்**

திருவரங்கத்தில் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோவிலில் 55 உப சன்னிதிகள் உள்ளன.

திலகவதியார் விரும்புகின்றார். அதற்காக அம்பொன் மணி நூல் தாங்காது ஆருயிர்க் கெல்லாம் அருள் செய்யும் வண்ணம் தம்பியருக்காகத் தம் உயிர் தாங்கித் தவ வாழ்க்கை மேற் கொள்கின்றார். ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்த நிலையில், சிறு வயதினராக இருந்தாலும் மருள் நீக்கியார், தனது துயரத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு, அறவழி மேற்கொள்கிறார். அறச்சாலைகளையும் தண்ணீர்ப் பந்தலையும் அமைக்கின்றார். சோலைகளை வளர்த்தும், குளங்களைத் தோண்டியும் மேலும் பல தர்மங்களைச் செய்தும் பண்புடைய வாழ்க்கை நடத்துகின்றார்.

ஆனால், அதில் ஒரு நிறைவு அவருக்கு உண்டாகவில்லை. படிநிலை வளர்ச்சி பெற்று வரும் வகையில் அவருடைய உள்ளம் முழுமையான இன்பத்தை நாடுகிறது. பல சமயங்களின் உண்மைகளை அவருக்கு எடுத்துரைத்து அவற்றின் முடிவான நிலைகளை ஆய்வு செய்து, அவர் மேற்கொள்ள வேண்டிய உண்மை நெறிகளைப் பற்றிய விளக்கங்களை அவர் பெறும் வகையில், திருவருள் அவருக்குத் துணை செய்யவில்லை.

"சமயங்களானவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர்அருளா
மையினாற்"

என்று சேக்கிழார் பெருமான் இது பற்றி தமது உணர்வினைத்தெரிவிக்கின்றார்.

இவ்வாறு மருள் நீக்கியாருக்கு நேர்ந்தது எதனால் என்ற கேள்விக்கு விடை அளிக்க இயலுமா? உயிர்களுடைய பக்குவத்திற்கேற்ப, இறைவனுடைய அருள் வெளிப்படுவதும். அதுவே தக்க துணையாகி, உயிரை நடத்திச் செல்வதும், இறைவன் தனக்கே அமைத்துக் கொண்ட நியதி ஆயிற்றே! இதைப் பெருமானே, பின்னர் தனக்குத் "தலைக்காவல் இல்லாத நிலை" என்று தெரிந்து கொள்கிறார். திருவருளின் செயல்பாட்டினை அறிவால் அறிந்து கொள்ள இயலாது என்பதை பல சமயங்களைச் சார்ந்த அருளாளர்கள் நமக்கு எடுத்துச் சொல்கின்றனர். இருந்தாலும். தெளிவுபெறாத உள்ளம் வாழ்க்கையில் காணப்படும் ஏற்ற தாழ்வுகளை, எல்லாம் இறைவன் செயலென்றும், வினை உடல் வழியாக நாம் முற்பிறவிகளில் சம்பாதித்த வினைகளின் பயன்களாக இப்பிறவியில் அனுபவித்து வருகிறோம் என்றும் எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. அறிவுக்கு வரம்பு உண்டு என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை. இதுவும் திருவருளின் செயல் என்றும் ஒப்புக் கொள்வதில்லை.

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" என்று திருஞான சம்பந்தர் பெருமான் அருளி இது பற்றிய ஐயப்பாட்டினை நீக்கியதைத் தெளிந்து மகிழ்வோம்.

இந்த நிலையில் மருள் நீக்கியார் சமண சமயம் சார்ந்து, அதன் நுட்பங்களைத் தெரிந்து கொண்டு, வாதங்களில் திறமை பெற்றவராக, தருமசேனர் என்ற பட்டம் பெறுகின்றார். இதை அவருடைய அறவாழ்க்கையின் தொடர்ச்சி என்றே கொள்ள வேண்டும். அறம் அன்பின் வெளிப்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டும். அன்பின் ஆழத்தில் திருவருள் மலர வேண்டும். திருவருளே, தன் முனைப்பை மாற்றி எளிமையில் அமைத்து இறைவனுடைய திருவடி நிழலின் பெருமையை உணர்த்தவல்லது.

தக்கநேரத்தில் திருவருள் ஞானாசிரியன் வாயிலாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இங்கேதான், மருள் நீக்கியாரின் தமக்கையாராகிய திலகவதியாரின் பொறுப்பும், பணியும் முன்னிலைக்கு வருகின்றன. தமக்கையார். தனது தம்பி உளராக வேண்டுமென்று விரும்புகிறார்.

உலகத்தில் உள்ளவராக இருப்பது என்பது வெறும் செல்வம், புகழ் போன்ற நிலையற்ற பொருட்கள் நிரம்பிய வாழ்க்கையாக இருப்பது என்பதல்ல. அறமும், அன்பும் ஒரு சேர, திருவருள் துணையுடன்

சிவானந்தப் பேற்றினில் திளைத்து, உயிர்களிடத்தில் சிவத்தைக் கண்டு. தான்பெற்ற முழு நலத்தை, உலகோடு பகிர்ந்து கொண்டு, உலகுக்கு வழிகாட்டியாக இருப்பதே "உளராதல்" எனக் கொள்ளலாம். இதற்காகவே திலகவதியார் இருந்தார். இருப்பது என்பது தாங்குதல் என்ற பொருள்தரலாம். கடவுள் இருக்க, இந்த உலகம் இருக்கிறது. அம்மையார் மனைத் தவம் புரிந்து இருந்தார், சிவப்பரம் பொருளை முறையோடும் உணர்வுடனும் வழிபட்டு தனது குறிக்கோள் நிறைவேற தனது உடலைத் தாங்கி இருந்தார் எனவும் கொள்ளலாம்.

திலகவதியார், தனது தம்பி பரசமயச் சூழலில் வீழ்ந்து உழலுகிறார் என்பதைக் கண்டு மிக வருந்துகிறார். திருவதிகைத் திருவீரட்டானத்தைச் சேர்ந்து அம்மையார் சிவப்பரம்பொருளுடன் ஒன்றிய நிலையில் கைத்திருத்தொண்டு செய்து வந்தவராகி, தன்னை ஆட்கொண்ட பெருமான் அருள வேண்டும் என்று பல முறை விண்ணப்பம் செய்தார். அதாவது, மருள் நீக்கியார் தனது தம்பியர் என்கிற வகையில் மட்டுமில்லாது சைவ நெறியைச் சார்வதற்கு உரிய தகுதிகளைப் பெற்றவர், தனது அறியாமையால் அல்லலுறுகிறார் என்ற எண்ணம் மேலிடத் தம்பியைக் காக்குமாறு வேண்டுகின்றார். உடன் தோன்றியவராக நின்ற திலகவதியார் ஆசானாகப் பரிணமிக்கின்றார். தம்பிக்காக இறைவனிடம் மன்றாடுகின்றார்.

சிவபெருமானார் திருவருள் கூடியது; திலகவதியார் இடம் சேர்வதென மருள் நீக்கியார் முடிவு செய்கிறார்.

இறைவன் தந்த சூலை நோயைத் தாங்க இயலாமல் மருள் நீக்கியார், திருவதிகை வீரட்டானத்தை அடைந்து திலகவதியார் திருமடத்தைச் சார்ந்து அவருடைய திருவருள் நெறி அருள வேண்டும் என்று கேட்டு கொள்கிறார்.

அருள் கூடும் நேரத்தில் ஆசானும் வந்து அமைவான் என்பதற்கு இது ஒரு வலுவான சான்றாகும். அந்த நேரத்தில் தமக்கையாரின் எண்ணம், சிவபெருமான் திருவருளால் இது நிகழ்ந்தது என்பதே. தனது தம்பியும் நல்ல குறிக்கோளைப் பெற்று, பூவுலகில் உளராக வேண்டும் என்பதுவே அவருடைய விருப்பம். "எழுந்திரீர்" என்பது அவர் மொழிந்த மொழியாகும். இதுவே அவருடைய வாசகதீக்கையுமாகும். திருவருளைச் சார்ந்து சிவபெருமானுடைய கழல்களைப் போற்றிக்கொண்டு நிலைபெற்று நிற்கும் வகையில் பணி செய்திருக்க வேண்டுமென்பது ஆசான் சீடனுக்கு இட்ட பணியுமாகும்.

இறைவனுடைய பேரருளை நினைத்து திலகவதியார் மருள் நீக்கியாருக்கு ஐந்தெழுத்தை ஓதி, திருநீற்றையும் கொடுத்தார். இது, தம்பியாருக்குத் திருக்கோயிலுக்குள் புகுவதற்கான தகுதியைக் கொடுத்தது. குருதீக்கை முழுமை பெறுகிறது.

சூலைநோய் விடுத்து குணம் அடைந்த மருள்நீக்கியார் இதற்கு எவ்வாறு கைம்மாறு செய்வது என்று திகைக்கின்றார். அவருடைய முதல் பதிகத்தில் தனது உள்ளத்து உணர்வுகளை யெல்லாம் வெளிப்படுத்தவும், இறைவனிடமிருந்து "நாவுக்கரசு" என்ற பெயரையும் பெறுகிறார்.

> ## மாற்று சமயத்தினரின் பங்கு
>
> காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோவிலுக்கு, ராபர்ட் கிளைவ், கர்னல் லியோனல் பிளேஸ், டெல்லி ஆலம்கீர் பாஷா போன்ற பிற சமயத்தினரும் காணிக்கைகள் வழங்கியுள்ளனர்.

திருவருள் ஆசானைக் கருவியாக வைத்து செயல்படுகிறது. திலகவதியாரும் தனது தம்பியார் பொய்ம்மையை விட்டு அகன்று, மெய்ம்மையை உணர்ந்து, சிவ பெருமான் திருவடி சார்ந்து மாறாத அன்புடன், விடாது பணியாற்ற வேண்டும் என்ற தனது விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு, தம்பியாரை சூலை நோய் கொடுத்து ஆட்கொண்ட பேற்றினை நினைத்து சிவபெருமானின் கருணைத்திறத்தைப் பற்றிச் சிந்தித்து நன்றியுணர்வு பொங்க மகிழ்கின்றார்.

"கொள்ளினும் நல்ல குருவைக் கொள்க" என்றார் திருமூலர்பெருமான். சிறந்த ஆசானாக இருந்து தக்க நெறியை

காட்டி திலகவதி அம்மையார் ஆற்றிய தொண்டு திருமூலர் வாக்கை விளக்கும் வகையில் அமைந்துள்ளது என்பது முற்றிலும் பொருந்தும்.

திருநாவுக்கரசர் இதனை கோடிட்டுக் காட்டுகின்றார். "ஈன்றாளுமாய், எனக்கு எந்தையுமாய், உடன் தோன்றினராய்" என்ற அவருடைய திருவாக்கு திருப்பாதிரிப் புலியூர்ப் பதிகத்தில் இடம் பெறுகிறது. தனது தமக்கையார் உடன் தோன்றினராயும், ஆசானாகவும் வந்து, தனக்கு சிவநெறி காட்டியதைத் தெளிவுபடுத்துகின்றது. அதனால் அவர் பெற்றது பெருவாழ்வு. அறியாமையால் செய்யும் செயல்கள் சிறுவாழ்வுக்கு வழி செய்கிறது. இந்தச் செயல்கள் வெறுக்கத்தக்கவை என்பது பெருவாழ்வின் தொடக்கம். "வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையால் பொறுப்பவனே," என்பார் மாணிக்கவாசகர்.

பெருவாழ்வுபெற்ற திருநாவுக்கரசர் தமக்கையாரைச் சிறப்பித்துச் சொல்வது திருவாரூர் திருப்பதிகத்தில் ஆறாவது திருப்பாட்டில் வருகிறது.

**"எம்மை யாரிலை யானும் உளேனலேன்**
**எம்மை யாரும் இதுசெய்ய வல்லரே**
**அம்மை யார் எனக்கு? என்று என்று அரற்றினேற்கு**
**அம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே"**

தன்னை அடைந்தவனைக் காப்பது இறைவன் கடனாகும்.

**"தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாய வர்தங்கடன் ஆவது"** என்று அப்பரடிகள் கூறியுள்ளதையும் காண்க

தன்னையடைந்த நற்சீடனுக்கு நல்லாசான் செய்வதும் இதுவே, தனது திருவடியை. அவனுடைய தலைமேல் சூட்டி திருவடி ஞானத்தை அருளி, உண்மையை உணர வைத்து அவனை மாயா காரியங் களிடருந்து விடுவித்து, அவனுடைய ஆணவமலத்தையும் வலுவிழக்கச் செய்பவர் சற்குருவே.

**"தாள் தந்தளிக்கும் தலைவனே சற்குரு**
**தாள் தந்து தன்னை அறியத்தர வல்லோன்.**
**தாள் தந்து தத்துவாதீ தத்துச்சார் சிவன்**
**தாள் தந்து பாசம் தணிக்கும் அவன்சத்தே"**

*(திருமந்திரம், சற்குருநெறி)*

திருவடி தீக்கை அளிப்பதன் மூலம், சற்குருவானவன் சீடர்களுடைய வினை களை நீக்க வல்லவன். ஒன்பது கோள்களும் ஒருவகையிலும் தீங்கு செய்யாமல் காத்தருள்வான். சீடனுடைய யம பயம் நீங்கும். "நமனை அஞ்சோம்" என்றபடி அவனுடைய உள்ளம் உறுதிப்படும். திருவடி தீக்கை பிறவியையும் தீர்க்க வல்லது.

**"தவிரவைத்தான் வினை தன்னடியார் கோள்**
**தவிரவைத்தான் சிரத்தோடு தன்பாதம்**
**தவிர வைத்தான் நமன் தூதுவர் கூட்டம்**
**தவிரவைத்தான் பிறவித்துயர் தானே"**

ஞான ஆசிரியன் வெறும் கல்வி கேள்விகளில் மட்டும் புகழ் பெற்றவன் ஆகமாட்டான். அவனுடைய ஞானம் அனுபவத்தில் நிற்கும் தன்மையுடையது, அதுவே சீடனுடைய மலங்களை நீக்கி, சிந்தித்துத் தெளியவைக்கும் ஆற்றல் பெற்றது.

சொல்லப்போனால், சத்திநிபாதம் பெற்று வரும் சீடனுக்கு அருள்புரிந்து அவனுடைய படிநிலை வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு இருள் மலம் சூழ்ந்த, அறியாமையைப் போக்கி, அறிவினைத் தந்து முன்னம் பிறவிகளில் நிகழ்ந்த செயல்பாடுகளால் உருவாகும் வாசனைகள் சீடனைத் தீங்கு செய்யாத வண்ணம் காத்தருளி, பல நன்மைகளைச் செய்யும் ஆசான் சீடனுக்கு வீடுபேறு கிடைக்க குருவாய் வந்து அருளுவான் என்பதும் பொருந்தும். நற்சீடனும் சற்குருவும் சேருமிடம் ஞானபீடமாகும். அங்கே குரு வழிபாடு நடக்கின்றது. குருவும், சீடனும் உடலும் உயிரும் போல இணைகின்றனர். காணாதது காணப்படுகிறது.

கேளாதது கேட்கப்படுகின்றது. திருவருள் அனுபவம் ஆழச் செல்கிறது. உபதேசம் வெளிப்படுகிறது. இதுபற்றி மேலும் சிந்திப்போம்.

- தொடரும்.

# கேள்வி- பதில்

நா. இராமர், அஸ்தினாபுரம்.

கேள்வி : "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று சான்றோர்கள் வாழ்த்துகிறார்கள். அப்பதினாறு என்பது எதைக் குறிக்கும்?

பதில் : "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்பது நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் பெற்றுச் சிறக்க வேண்டிய பதினாறு வாழ்க்கைப் பேறுகளையே குறிக்கும். அவை பின்வருமாறு :

1. மதிப்பு தரும் கல்வி
2. வலிமை
3. வெற்றி
4. துணிவு
5. மக்கள்பேறு
6. பொன்பொருள்
7. உணவுப் பொருட்கள்
8. நல்வாழ்வு
9. இன்ப நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. நிலைத்த புகழ்
13. தரும சிந்தை
14. நற்குடிப் பிறப்பு
15. நோயற்ற வாழ்வு
16. நீண்ட ஆயுள்

இப்பதினாறு பேறுகளைத் தொகுத்துக் கூறும் பாடல் பின்வருமாறு:

"துதிவாணி வீரம் விசயம்சந் தானம்
துணிவு தனம்
அதிதானியம் சவுபாக்கியம் போகம்
அறிவு அழகு
புகிதாம் பெருமை அறம்குலம்
நோயின்மை பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப்
பராபரனே"

செல்வி கண்மணி, செங்கற்பட்டு

கேள்வி : இன்றைய உலகில், இறைவனைத் தொழாத நாத்திகர்கள் பலரும், மிகுந்த செல்வம் உடையவர் களாகவும், செல்வாக்கு உடையவர் களாகவும் திகழ்கிறார்களே? இது ஏன்? இதற்கு தகுந்த விளக்கம் கூற வேண்டும்.

பதில் : இறைவனைத் தொழாத நாள் வீணாள் என்று வாணாள் முழுவதும் பக்தியும், தொண்டும் புரிந்து வாழும் அடியார்களுக்கு மட்டும் இறைவர் அருள்புரிவதில்லை. அவர்தம் சந்ததி யினருக்கும் கூட சகல நலமுடன்வாழ வரம் வழங்குகின்றனர். அவ்வாறு இறைவரின் வரம் பெற்ற அடியார்களின் குடும்பத்தில் சிலர் நாத்திகர்களாக இருப்பினும் அவர்தம் முன்னோர்களின் புண்ணியம் காரணமாக அவர்களும் செல்வமும், செல்வாக்கும் பெற்றுத் திகழ்கிறார்கள்.

இதனைத் திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

"நாளாய போகமே நஞ்சணியும்
கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வாய் மடநெஞ்சே!
அரன்நாமம்
கேளாய் நம்கிளைகிளைக்கும்
கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம்
பெருமானே!"

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தால் "கிளைகிளைக்கும்" அருள்புரிவது ஈசன் பேரருள் ஆவதைத் தெளியலாம்.

அக்கிளையில் ஒரு கிளை நாத்திகமும், நற்பண்பும் அற்றதாய் இருப்பினும் முன்னை இறைவர் தந்த வரம் பிழையாதென்பது உறுதி.

இரா. சுகுமார், சேலம்.2

**கேள்வி** : ஏழுலகம் என்று கூறப்படுகின்றதே! அவ்வேழு உலகங் களில் யார் யார் இருக்கிறார்கள்?

**பதில்** : பூலோகத்தில் மனிதரும், விலங்கு, பறவை, தாவரங்களும் வாழ்கின்றனர்.

புவர்லோகத்தில் வாயு தேவர்கள் வாழ்கின்றனர். சுவர்லோகத்தில் இந்திரனும், தேவர்களும் வாழ்கின்றனர். மகாலோகத்தில் மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள் வாழ்கின்றனர்.

சனலோகத்தில் பிதிர்தேவர் வாழ்கின்றனர். தவலோகத்தில் சனகர் உள்ளிட்ட மகான்கள் வாழ்கின்றனர். சத்திய லோகத்தில் பல பிரம்மதேவர்கள் உள்ளனர்.

கமலா, இராயபுரம்.

**கேள்வி** : ஆழ்வார், நாயன்மார் என்ற பெயர்கள் வர என்ன காரணம்?

**பதில்** : திருமாலின் பண்பு நலமாகிய கடலில் ஆழ்பவர் ஆதலின் ஆழ்வார் ஆயினர்.

'நாயன்' என்பதற்குத் தலைவன் என்றுபொருள். சைவசமயத்தினர் தமக்கு வழிகாட்டும் தலைவர்களாகப் போற்றுவதால் சிவனடியார்கள் நாயன்மார்கள் என்ற பெயரைப் பெற்றனர்.

கு. சுடலைமுத்து, விழுப்புரம்

**கேள்வி** : "திரிசங்கு சுவர்க்கம்" என்றால் என்ன?

**பதில்** : திரிசங்கு என்பவன் அயோத்தியை ஆண்ட அரசர்களில் ஒருவன்.

இவன் தன் உடலோடு சொர்க்கம் புகவேண்டும் என்று தம் குலகுருவாகிய வசிட்டரை வேண்டினான்.

அவர் அவ்வாறு அனுப்ப இயலாது என்று கூறி மறுத்துவிட்டார்.

திரிசங்கு பின் விசுவாமித்திர முனிவரை அடைந்து தம்மை உடலோடு சொர்க்கத்திற்கு அனுப்ப வசிட்டர் இயலாது என மறுத்ததைக் கூறித் தம்மை உடலோடு சொர்க்கத்திற்கு அனுப்ப வேண்டுமென வேண்டிக் கொண்டான்.

விசுவாமித்திரரும் யாகம் செய்து திரிசங்குவை உடலோடு சொர்க்கத்திற்கு அனுப்பினார். ஆனால் தேவர்கள் உடலோடு சொர்க்கத்திற்குள் திரிசங்குவை அனுமதிக்க இயலாது எனக் கூறிக் கீழே தள்ளி விட்டனர்.

தலை கீழாக பூமியை நோக்கி வந்த திரிசங்குவின் அபயக்குரல் கேட்ட விசுவாமித்திரர், திரிசங்குவிற்காகத் தம் வலிமையால் புதிய சொர்க்கத்தையும், சில நட்சத்திரங்களையும் வானில் படைத்தார்.

அதுகண்டு அஞ்சிய தேவேந்திரன் விசுவாமித்திரரை வேண்டி அவருடைய புதிய படைப்பை நிறுத்தச் செய்தான். திரிசங்குவும், புதிய நட்சத்திரங்களும் நட்சத்திர மண்டலத்தில் சேர்ந்து விட்டனர்.

மேலும் போகாமல், கீழும் விழாமல் திரிசங்கு இருந்த நிலை "திரிசங்கு சொர்க்கம்" என இன்றும் பேச்சில் வழங்கி வருகின்றது.


## புளியங்காய்கள் பொன்காய்களாக உதிர்ந்த திருத்தலம்

காஞ்சிபுரத்தில் உள்ள பாடல்பெற்ற திருத்தலம் அருள்மிகு ஓணகாந்தன் திருக்கோயில் ஆகும்.

இத்திருத்தலம் வருகை புரிந்த சுந்தரர் "நெய்யும் பாலும் தயிரும் கொண்டு" என்று தொடங்கும் பதிகம்பாடிப் பொன்பெற்றுள்ளார்.

இப்பதிகத்தின் ஐந்தாம் பாடலைப் பாடும்போது இறைவர் பக்கத்தில் இருந்த புளிய மரத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டார்.

அதனை அறிந்த சுந்தரர் அங்குச்சென்று பதிகத்தைப் பாடி நிறைவு செய்ய, இறைவர் அப் புளிய மரத்துக் காய்களையே, பொன் காய்களாக விழுமாறு உதிர்த்தார். என்னே இறைவரின் திருவருள்!!.



# பிரதோஷ வழிபாடு


## பெருமையும், மகிமையும்

ஆன்மீகத்தென்றல் டாக்டர் கே.பி. முத்துசாமி

சாவா மூவா நலம் பெற திருப்பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து கிடைக்கும் அமிர்தம் உண்ண வேண்டும் என்பதற்காக மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்றும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு தலைப்புறம் தேவர்களும், வால்புறம் அசுரர்களும் இருந்து தசமி திதியன்று பாற்கடலைக் கடைய ஆரம்பித்தார்கள்.

மறுநாள் ஏகாதசியன்று தொடர்ந்து கடைந்த போது வாசுகி வருத்தம் தாங்காது நஞ்சைக் கக்கியது, கடலில் இருந்தும் நஞ்சு தோன்றியது. வாசுகி உமிழ்ந்த நஞ்சும், கடலிடைத் தோன்றிய நஞ்சும் கலந்து ஆலகால விஷம் ஆகி பயங்கர வெப்பத்துடன் உலகத்தையே அழிக்கும் நிலை வ்ந்தது. அமிர்தம் வேண்டியவரை ஆலாலம் தொல்லைப்படுத்தியது.

ஆலாலத்தைத் தீண்டியதால் வெண்ணிற முடைய திருமால் நீலநிறமானார். ஆலாலத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் திருக்கைலாயம் அடைந்து நந்தியெம் பெருமானால் சிவப்பரம் பொருளிடம் அழைத்துச் செல்லப்பட்டனர். சிவ பெருமானிடம் தங்களைக் காக்குமாறு வேண்டினர்.



தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய கருணையே வடிவான கண்ணுதற் கடவுள் சுந்தரை அழைத்து அக்கொடிய நஞ்சினைக் கொணருமாறு கூறினார். சுந்தரரும் சென்று நஞ்சினைத் திரட்டி எடுத்து வந்து சிவபெருமானிடம் தந்தார். எல்லா உயிர்களும் துன்பம் நீங்கி இன்புறும் வண்ணம், சிவபெருமான் ஆலால நஞ்சினை உண்டால் உள்முகத்தில் உள்ள ஆருயிர்களும், உமிழ்ந்தால் வெளிமுகத்தில் உள்ள உயிர்களும் அழிந்து விடும் என்பதால் உமையம்பிகை அருளால் தமது கண்டத்திலேயே அடக்கி அருளினார். இதனால் நஞ்சு நிறைகண்டம் நீலநிறமானது. பெருமானும் நீலகண்டர் ஆனார்.

இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விஷத்தை உண்டருளியது ஏகாதசி மாலை நேரம் ஆகும். தேவர்களுக்கும் அடியார்களுக்கும் தோஷம் ஏற்படாமல் காத்து அருளிய சிவபெருமானுக்கு உகந்த காலம்தான் பிரதோஷ காலமாகும். அக்காலத்தில் அண்ட சராசரங்களும் சிவபெருமானுடைய நமசிவாய மந்திரத்தை சிந்தையில் கொண்டு ஏகாந்தத்தில் அடங்கி ஒடுங்கும். சிவபெருமான் புலித்தோலை அணிந்து, மானும், மழுவும், சூலமும் தாங்கிய திருக்கரத்துடன் நந்திதேவரின் இரு கொம்புகளின் நடுவே ஆனந்த நர்த்தனம் புரியும் புண்ணிய நேரமே பிரதோஷ காலமாகும். எம்பெருமான் ஆலாலத்தை உண்ட நாள் சனிக்கிழமை என்பதால் சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் மிக்க சிறப்பும் மகிமையும் பொருந்திய தாகும்.

### பிரதோஷம் என்றால் என்ன?

தோஷம் என்ற வடமொழிச் சொல்லுக்கு தமிழில் குற்றம் என்று பொருள். பிரதோஷ வழிபாடு என்றால்

ஆன்மாக்களுடைய அத்தனை தோஷங்களும் (பாவங்கள்) குற்றங்களும் நீங்க வழிபடுதல் என்று பொருள்.

**பிரதோஷக் காலம் :**

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு காலங்களிலும் திரயோதசி திதி வருகின்ற நாட்களில் மாலையில் சூரியன் மறைவதற்கு முன்புற்ற 3 ¾ நாழிகை நேரமாகிய மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை உள்ள காலமே பிரதோஷக் காலம். இந்தக் காலமே பரமேஸ்வரனை தியானம் செய்ய தகுந்த காலம்.

**பிரதோஷத் தத்துவம் :**

பிரதோஷக் காலம் உலகத்தை சிவபெருமான் தன்வசப்படுத்தி கொள்ளும் காலமாகும். உலகையே ஈஸ்வரன் தன்வசப்படுத்திக் கொள்ளும் அந்த பிரதோஷ நேரத்தில் உலகம் ஈஸ்வரனிடம் ஒடுங்குகிறது. உலகமே ஒடுங்கும்போது நம் மனமும் ஒடுங்குகிறது. நம் மனம் ஒடுங்குகிறது. நம் மனம் ஒடுங்கும் அந்த நேரமே நல்ல நேரமாகும். பிரதோஷக் காலம் சிவ நாமங்கள் சொல்வதற்கு உகந்த நேரமாகும். மேலும் சிவ பெருமான் நந்தியெம்பெருமானின் இரு கொம்புகளுக்கு இடையில் நடனமாடி மகிழ்வித்த நேரம் இதுவேயாகும்.

பேரழிவுக் காலத்தில் உலகில் உள்ள எல்லா உயிர்களும் பிரம்மாதி தேவர்களும் சிவபெருமானுக்குள் ஒடுங்கி மறைந்தனர். அப்படி தருமமாகிய தானும் ஒடுங்கி மறைந்துவிடக் கூடாதே என்று கருதிய தருமதேவதை தன்னையே ரிஷபமாக்கி இறைவனுடைய நடனத்திற்கு உதவும்படி இறைவனிடம் வேண்டியபடி சிவபெருமானும் அருளினார்.

பிரதோஷக் காலத்தில் ஈசனுக்கும் தருமதேவதையாகிய நந்திதேவருக்கும் ஒரே நேரத்தில் பூசை நடைபெறுகிறது. சிவாலயங்களில் பிரதோஷக் காலப் புறப்பாட்டில் இரண்டாவது சுற்றில் சுவாமி ஈசான்ய மூலையில் திரும்பி தெற்கு நோக்கி நின்று காட்சி தரும் வேளையில் தரிசனம் செய்வது சாலச்சிறந்ததாகும்.

**பிரதோஷ வகைகள் :**

பிரதோஷம் 9 வகைப்படும். அவை யாவன :

**1. நித்தியப் பிரதோஷம் :**

தினந்தோறும் மாலை 4-30 மணி முதல் 6 வரையுள்ள காலமே நித்திய பிரதோஷமாகும்.

**2. பட்சப் பிரதோஷம் :**

வளர்பிறையில் (சுக்லபட்சம்) 13வது திதியாக வரும் திரயோதசி திதியில் வரும் பிரதோஷம் பட்சப் பிரதோஷம் எனப்படும்.

**3. மாதப் பிரதோஷம் :**

தேய்பிறையில் (கிருஷ்ணபட்சம்) திரயோதசி திதியில் வரும் பிரதோஷமே மாதப் பிரதோஷம் எனப்படும்.

**4. பிரளயப் பிரதோஷம் :**

பிரளய காலத்தில் எல்லாம் சிவனிடம் ஒடுங்கும். அதுவே பிரளயப் பிரதோஷமாகும்.

**5. நட்சத்திரப் பிரதோஷம் :**

உங்கள் நட்சத்திரத்திலே பிரதோஷம் வந்தால் அன்று வழிபாடு செய்தால் நினைத்த காரியம் உடனே நடக்கும். அந்த நட்சத்திரமே சிவனை பூஜிப்பதாக ஐதீகம்.

**6. திவ்யப் பிரதோஷம் :**

இரண்டு திதிகள் ஒரே நாளில் காலையில் திரயோதசி அல்லது இரவில் சதுர்த்தசி திதி வரும் பிரதோஷ நாளில் வந்து வணங்கினால் அந்த திவ்யப் பிரதோஷம் சிறப்பு உடையது.

**7. தீபப் பிரதோஷம் :**

திருக்கோயிலில் சிறிய சிறிய அகல்விளக்குகளை உரிய இடத்தில் ஏற்றி வைத்தால் தீபப் பிரதோஷம் என்று பெயர். தீபத்தை இறைவனுக்கு காணிக்கையாக்கி வழிபாடு செய்வது இது. நமக்கு இருக்கக் கூடிய பழைய கர்மாக்களால் ஏற்படும் தீவினைகளைப் போக்க உதவும்.

**8. செவ்வாய்ப் பிரதோஷம் :**

செவ்வாய்க்கிழமை வரும் பிரதோஷம் தீராத நோய்களை, ரணங்களை தீர்க்க வல்லது. வைத்தீஸ்வரன் கோயிலில் செவ்வாய் பிரதோஷம் வரும் நாளில் வணங்குதல் சிறப்பு. திருக்கோயில்களில் செவவாய் பிரதோஷம் வரும் நாளில் வணங்குதல் சிறப்பு. திருக்குளத்தில் நீராடுங்கள். குடும்பத்தில் உள்ள சண்டை சச்சரவுகள் தீரும்.

**9. சனி மகாப்பிரதோஷம் :**

சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் சனி மகாப் பிரதோஷம். 10 பிரதோஷம் சென்று வணங்கிய பலனை ஒரு சனி மகா பிரதோஷம் கொடுக்கும். சனிக்கிரகத்தினால் ஏற்படும் பீடையிலிருந்து விடுபடவும் 7 ½ சனி, அஷ்டமத்து சனி, சனி திசை, அர்த்தாஷ்டம சனி, 4ம் இடம் வந்தாலும், 8ம் இடம் வந்தாலும் ஏற்படும் சிரமம் நீக்கும்.

# திருமண வரம் நல்கும் திருவேற்காடு திருத்தலம்

தொண்டை நன்னாட்டின் பெருமையைத் தெய்வச் சேக்கிழார் பெருமான்

***"தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தை தூய மாந்தர் வாழ் தொண்டை நாட்டு இயல்பு சொல்வரைத்தோ?"***

என்று சாற்றியிருப்பது கொண்டு, நாம் தெளிந்து மகிழலாம்.

இத்தகைய தொண்டை நன்னாட்டின் கண் பாடல் பெற்ற 32 சிவாலயங்கள் மிகச் சிறந்து விளங்குகின்றன. அவற்றுள் பராசக்தியான உமை அன்னையிடம் ஞானப்பால் உண்ட ஆளுடைய பிள்ளையாராம் திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடல்பெற்ற பழமையும் பெருமையும் மிகுந்த திருத்தலம்தான் திருவேற்காடு.

திருவேற்காட்டில் உயர்ந்த மதில்களோடு சிறப்புறக் கட்டப்பட்டிருந்த திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயச் சிறப்பினை ஞானசம்பந்தர்

"செம்பொன் புரிசை திருவேற்காடு
அமர்ந்த செய்ய சடைக்கற்றை நம்பர்"

எனப் பாடியிருப்பதைக் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலேயே திருவேற்காடு திருத்தலம் வந்து அருள்மிகு வேதபுரீசுவரரைக் காதலால் கைகூப்பி வணங்கிச் செந்தமிழ்ப் பதிகம் பாடி இன்புற்று மகிழ்வில் திளைத்திருந்தமையைத் தேவாரமும் பெரிய புராணமும் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

திருஞானசம்பந்தர், திருவேற்காடு சென்று தொழும் மெய்யடியார்கள் நலங்கள் யாவும் கொண்டு குணமுற வாழ்வர் என்பதனை திருக்கடைக்காப்பில் அமைத்து


"விண்ட மார்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல் பேணிச்
சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாகும்"

எனப் பாடியிருக்கும் சிறப்பை நாம் உய்த்து உணரலாம்.

முருகப் பெருமான் சூரர்களை வெல்வதற்காக பராசக்தியிடம் வேல்பெற்ற இடம் இதுவாதலால் இத்தலத்திற்கு வேற்காடு என்பது பெயராயிற்று என்பர். திருஞானசம்பந்தரும் தாம் பாடியுள்ள தேவாரப் பாடலில்

**"தோலினால் உடை மேவ வல்லான் சுடர் வேலினால் உறை வேற்காடு"**

எனப் பாடியிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கது.



நான்கு வேதங்களும் வேலமரங்களாய் நின்று வழிபட்டதால் இத்தலம் வேற்காடு எனவும், இறைவன் திருப்பெயர் வேதபுரீசுவரர் எனவும் அமைந்தது என்பர், அதற்கொப்ப திருஞான சம்பந்தப் பெருமானும்

"வேத வித்தகன் வேற்காடு"

எனப் பாடிப் பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது. அகத்தியமுனிவருக்கு இறைவன் தம் திருமணக் கோலக்காட்சி அருளிய தலமும் இதுவாதலால், அழகிய சிவலிங்கத் திருமேனி மூலவராக விளங்க, அதற்குப் பின்னால் சுவரில் திருமணக் கோலத்தில் சுவாமியும், அம்பாளும், அருகில் விநாயகருடன் காட்சி வழங்குவதைக் கண்டு இன்புறலாம். கல்யாண சுந்தரமூர்த்தி விசேடமாகத் தோற்றமளிக்கும் தலங்களில் இது ஒன்றாகும்.

மேருமலையில் மயன் நிர்மாணித்த செம்பொன் திருமண மண்டபத்தில் சிவபெருமான் - பார்வதி திருமணக் கோலத்தைத் தரிசிக்க, எல்லாப் புவனங்களிலும் உள்ளவர்கள் வந்து கூடியபோது பூமியின் வடகோடு தாழ்ந்து

## திருக்கோயில்
திங்கள் இதழ்



சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | - ரூ | 10/- |
| ஓராண்டுச் சந்தா | - ரூ | 120/- |
| பத்து ஆண்டுச் சந்தா | - ரூ | 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | - ரூ | 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| 1. | முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 12,000/- |
| 2. | பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. | உள்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 4. | உள்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பண விடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சென்னை-34 என்ற பதவிப் பெயரில் அனுப்பவும்.


தென்கோடு உயர்ந்தது. அப்பொழுது பூமியைச் சமன்செய்யப் பொதிய மலைக்குச் செல்லுமாறு அகத்திய முனிவருக்கு ஆணை பிறப்பித் தருளினார் சிவபெருமான்.

"கருணையே வடிவான எம்பெருமானே! தங்கள் திருமணக் காட்சியை யான் காண இயலாதே!" என்று அகத்திய முனிவர் குறையிரக்க "நாம் நமது திருமணக் கோலத்தை உமக்குக் காட்டுவோம். தென்திசை செல்க" என்று திருவாக்கருளிய சிவபெருமான் அகத்திய முனிவருக்குத் தமிழ்த் திருநாட்டின் பற்பல திருத்தலங்களில் திருமணக் கோலத்தைக் காட்டியருளினார். அவ்வாறு அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டியருளிய முதன்மையான திருத்தலம்தான் திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருத்தலம் ஆகும்.

சதாசிவமூர்த்தங்கள் அறுபத்தி நான்கினுள், **25** திருவுருவங்களைச் சிறப்பித்து மகேசுவர மூர்த்தங்கள் எனச் சிறப்பிக்கின்றனர். அவற்றுள் சில நிக்கிரக மூர்த்தங்கள்; சில அனுக்கிரக மூர்த்தங்கள். சிவ பெருமான் பார்வதி திருமணக் கோலமே 'கலியாண சுந்தரர்' எனும் அனுக்கிரக மூர்த்தமாகப் போற்றப்படுகின்றது. அத்தகைய அனுக்கிரக மூர்த்தமே திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயிலில் நாம் காணும் சிவபெருமான் - பார்வதி திருமணக் கோலம் ஆகும்.

திருவேற்காட்டில் அருள்மிகு வேதபுரீ சுவரர் ஆலயம் வந்து வழிபடும் மெய்யடியார்களுக்கு "கல்யாண சௌபாக்யம்"
கைமேல் பலனாகக் கைகூடி வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

அபிராமி அந்தாதியில் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பலனை மெய்யடியார்களுக்கு நல்குவதாகக் கூறுவர்.

"குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை,
கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின் மீது
அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த
கனங்குழையே"

என்ற **99** ஆவது பாடலைப், பாராயணம் செய்வாருக்குத் திருமணம் கைகூடி வரும் என்பர் சான்றோர். அன்னை பாலாம்பிகையுடன் அருள்மிகு வேதபுரீசுவரர் திருமணக் கோலத்தில் அகத்தியருக்குக் காட்சியளித்த அற்புதத் தலமாம் திருவேற்காட்டில் அபிராமி அந்தாதியின் மேற்காணும் பாடலைப் பாடி வழிபட, திருமணம் கைகூடுதல் திண்ணமாகும்.

திருமண வரம் நல்கும் இத்தகு மகிமைமிகு திருவேற்காடு திருத்தலம், அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்த பெருமையும் கொண்டு விளங்கும் திருத்தலம் ஆகும்.

"வேற்காட்டு ஊர்
உள்நிலாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர்"

என்று மூர்க்க நாயனாரைக் குறிப்பிடும் சேக்கிழார் பெருமான் வேளாளர் குலத்தில் தோன்றிய மூர்க்க நாயனார், இத்திருவேற்காடு திருத்தலத்தில் நித்தமும் மகேசுவரபூஜை செய்து, அடியார்களை அமுது செய்வித்த சிறப்பினைப் போற்றுகின்றார்.

இத்தகைய மகேசுவரப் பூஜையால் இறையடி நீழல் பெற்று இன்புற்றுத் திளைக்கும் மூர்க்க நாயனாருக்குத் தனிச் சன்னிதி அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயத்தில் இருப்பது நாம் வழிபட்டுப் பயன்கொள்ளத்தக்கது ஆகும்.

முருகப் பெருமான்தம் வேலால் உண்டாக்கிய தீர்த்தம், வேலாயுதத்தீர்த்தம் என வழங்கப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலில் எழுந்தருளிய முருகப் பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் போற்றியுள்ளார்.

"வேற்காடுறை வேதபுரீசுரர் தருசேயே!......
பெருவாழ்வெனவே வரு பெருமாளே"

என்பது அருணகிரிநாதர் திருப்புகழாகும்.

இத்தகைய சிறப்புகள் அனைத்தும் நிறைந்த திருவேற்காடு திருத்தலத்தில் ஆதிநாளிலேயே தோன்றி இந்நூற்றாண்டில் மகிமை பெற்று மிகக் குறுகிய காலத்தில் சிறப்புற்று வளர்ந்த அன்னையின் திருத்தலமே அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருத்தலம் ஆகும்.

தேவி கருமாரி அன்னையின் பெருமையை எடுத்துமொழிதல் எளியசெயல் அன்று என்பதைத் தேவி கருமாரியம்மன் புராணம் கீழ்க்காணும் பாடலால் எடுத்துக் கூறுகின்றது.

"கண்டாலும் பிணிநீங்கும் நிதிபெருகும்
கலைஓங்கும்
ஞானமுறும் கருத்துணர்ந்து
விண்டாலும் வாணாட்கள் மிகப்பெருகும்
செவியுற்றால்.
வீரமுறும் வேதை தீரும்
பண்டாலின் கீழமரும் பரமனருள் சிறப்புற்றுப்
பரஞானப் பதமளிக்கும்
மண்டலத்தில் தேவி கருமாரியளின் புராணச்சீர்
எவராலும் மொழியொணாதே"

சக்திவழிபாடு நம் பாரத நாட்டில் மிகப் பழங்காலத்திலிருந்தே சிறப்புற்று விளங்கி வருகின்றது. ஆராய்ச்சியாளர்கள் சிந்து வெளிநாகரிகக் காலம் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணக்கிட்டுக் கூறுகின்றார்கள். ஹரப்பா, மொகஞ்சோதாரா ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் அம்பிகையின் மண்ணால் ஆன திருவுருவங்கள் பலவும் கிடைத்திருப்பதைக் கொண்டு சக்தி வழிபாட்டின் தொன்மையை நமக்கு ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

"அருளது சக்தி யாகும் அரன் தனக்கு"

என்று சிவஞான சித்தியாரில் வரும் தொடரால் இறைவனது அருள்கின்ற தன்மையே சக்தி வழிபாடாக மலர்ந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளை மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவுகாட்டி நலம் செய்கின்றாள், அவ்வாறே இறையருள் சக்தியாகிய தேவியும், உலகுயிர்கள் செய்யும் பிழைகள் யாவும் பொறுத்து திருவருள் புரிகின்றாள்.

கார்மழை போல் உலகிற்கு அருள் செய்யும் சக்தியே கருமாரி ஆவாள்.

"ஏணார் சோலை கருமாரி" என்று அப்பரடிகள் தாம் பாடியுள்ள திருத்தாண்டகத்தில் பாடியிருப்பது கொண்டு, கருமாரியன்னையின் பழமையை நாம் அறியலாம்.

திருவேற்காட்டில் அருள்மிகு வேதபுரீசுவரருடன் வீற்றிருந்து அருள்பாலித்தவள் வேற்கண்ணி அம்மை. சூரர்களை மாய்ப்பதற்கு முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்த சக்தி இவளே ஆதலால் இவளுக்கு வேற்கண்ணி என்ற நாமம் உண்டானது.

வேற்கண்ணி முருகப் பெருமானுக்கு வேல் அளித்த சிறப்பினை

**கண்ணுதலோன் கண்நோக்க வேற்கண்ணி
களிப்புற்றுக் குதுகலித்து அன்பு கூர்ந்து
மண்ணவரும் விண்ணவரும் வாழ்வுறவும்
அவுணர் குலம் அறக்களைவாய் என்றுரைத்து
எண்ணற்ற எழுபரிதிச் செழுஞ்சுடரின்
ஒளிவிஞ்சச் சுடர்வேலைக் கரத்தெடுத்து
கண்மணியாம் சேயவனின் கரமீந்து
அருள் புரிந்தாள் கண்ணுதலோன் உவகையுற்றான்"**

என்று தேவி கருமாரியம்மன் புராணம் கூறுகின்றது.

இவ்வாறு சூரபதுமனாதி அரக்கர்களின் அல்லல் ஒழிய சக்திவேல் தந்து அருள்புரிந்த வேற்கண்ணி அம்மையிடம் சிவபெருமான் சாம்பலை எடுத்துத் தந்து "இத்திருநீற்றினால் ஐந்தொழிலைப் பூவுலகில் கருமாரியாய் வீற்றிருந்து அருள்புரிக" என்று அறிவுறுத்தவே பண்டுதொட்டு கருமாரியாய் இத்தலத்தில் தேவி பராசக்தி வீற்றிருந்து அருள்புரிந்து வருகின்றார்.

க என்பது பிரமனையும்
ரு என்பது ருத்திரனையும்
மா என்பது திருமாலையும் குறிப்பனவாகும்.

பிரமன், ருத்திரன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் போற்றும் பராசக்தி, தேவி கருமாரி ஆவாள்.



## வைகாசி விசாகம்

முருகப்பெருமான் திருஅவதாரம் புரிந்த திருநாள் வைகாசி விசாகம்.

முருகப்பெருமானின் 1000 திருநாமங்களில் "விசாகன்" என்பது மிகச் சிறப்பான ஒரு திருநாமமாகத் திகழ்கின்றது.

"விசாகனும் விகற்ப வெகு ரூபக் காரனும்" என்பது அருணகிரிநாதர் அருளிச் செய்துள்ள "வேளைக்காரன் வகுப்பில்" பயின்று வரும் எழில்மிகு தொடர் ஆகும்.

திருச்செந்தூரிலும், முருகப்பெருமான் திருக்கோயில்களிலும் "வைகாசி விசாகம்" மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிவபெருமான் தமக்கு அளித்த திருச் சாம்பலையே தம் அடியவர்க்கும் வழங்கி அருளாட்சி புரிந்து வருகின்றாள் அன்னை கருமாரி,


**"கருமாரி திருநாமம் கருத்திருத்தித்
திருநீற்றை நுதற் தரித்தால் கன்மம் தீரும்
கருமாரி என்றுரைத்துக் குளிர்நீரில்
திருநீற்றை உட்கொண்டால் வினைகள் நீங்கும்
கருமாரி தேவியளைக் கண்ணுற்றுக்
கழல் வணங்கச் செயல்களெல்லாம்
வெற்றி சேரும்
கருமாரி திருநீற்றால் காசினியில் எண்சித்தும்
செயலாற்றிக் களிக்கலாமே"**

என்று தேவி கருமாரியன்னையின் திருச்சாம்பல் பிரசாத மகிமையைப் போற்றுகின்றது தலபுராணம்.

தேவி கருமாரி அளித்த சாம்பலால் முருகன் அமைத்த திருக்குளம் சாம்பர் பொய்கை எனச் சிறப்பிக்கப் பெற்று வருகின்றது. பஞ்சமாபாதகங்களும் சாம்பல் பொய்கையில் நீராட பறந்தோடும் என்றும் தலபுராணம் கூறுகின்றது.

சூரியன் தனக்குரிய ஞாயிற்றுக் கிழமையை அன்னையின் திருநாளாகக் கொண்டு அடியவர்களுக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அதனை ஏற்று, அன்னைதிருவருள் புரிந்தமையால் திருவேற்காடு தேவிகருமாரியம்மன் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை வழிபாடு சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.

அகத்திய முனிவர் ஆடிமாதம் ஞாயிற்றுக்கிழமையில் அன்னை கருமாரியைப் போற்றி வழிபட்டமையால் "ஆடியில் ஞாயிற்றுக்கிழமைகளில் என்னைத் துதிப்பவர்கட்கு அனைத்து வரங்கள் தருவேன்" என்று அன்னை வரம் அளித்தபடியே ஆடி மாத ஞாயிற்றுக் கிழமை வழிபாடு இத்திருத்தலத்தில் சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.



அருள்மிகு வேதபுரீஸ்வரர் -பாலாம்பிகை
திருமணக் கோலம்

## எப்படிப் பாடினரோ?

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த சேக்கிழார் பெருமான் தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் பயணம் செய்து, 63 நாயன்மார்கள் வாழ்ந்திருந்த ஊர்களுக்கெல்லாம் நேரில் சென்று, கல்வெட்டுக்கள், ஆவணங்களை ஆய்வு செய்து தமிழகமக்களின் வரலாற்றுக் காவியமாம் பெரிய புராணத்தைப் பாடியுள்ளார்.

இந்நாள்போல் வாகன வசதிகளும், தொலைத் தொடர்பு வசதிகளும் இல்லாத அந்நாளில் அவர் எத்தகைய சிரமங்களை மேற்கொண்டு இவ்வுன்னதக் காவியத்தைப் பாடியுள்ளார் என்பதை ஒரு கணம் கண்களை மூடிக் கொண்டு சிந்தித்துப் பாருங்கள்! பெரிய புராணத்தின் ஏற்றம் உங்களுக்குப் புலனாகும்.

-அறநிலையத் துறை ஆணையாளர்
திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
அவர்கள் சேக்கிழார் விழாவில்
ஆற்றிய உரையிலிருந்து


பஞ்ச பூதங்களும் அன்னையை வழிபட்டு வேண்டிக் கொண்டதற்கு இணங்க அப்பஞ்ச பூதங்களையும் ஐந்து நாகங்களைாகத் தன் முடிமேல் கொண்டு திருவருள் பாலித்தாள் தேவி கருமாரி அன்னை.

உலக மக்கள் உய்யும்பொருட்டு கிருத, திரேத, துவாபுர யுகங்களில் பாம்புருவம் கொண்டு புற்றில் அமர்ந்து அருள் புரிந்தாள் தேவி கருமாரி, அன்னை பாம்புருவாகித் திருவருள் பாலித்தமையால், அவள் குடிகொண்ட இத்திருத்தலம் "விஷம் தீண்டாப் பதி" எனவும் சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. சண்டி துர்க்கையின் காமதேனு மூர்த்தியென மாரியம்மனை சண்டி சப்தஸதீ என்னும் நூல் கூறுகிறது.

இக்கலியுகத்தில், மேலே நாற்கரத்தளாய் அமர்ந்த சிவசக்திக் கோலத்துடனும், கீழே உடல் மறைத்துத் தலைகாட்டும் நாரணிக் கோலத்துடனும் ஈருருவாய் அமைந்து அருள் பாலித்து வருகின்றாள் அன்னை தேவி கருமாரி.

திருவேற்காடு வருக!
திருவருள் பெறுக!


வெளியீடு : திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர்,
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு
சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670





சந்தோஷப் பொழுதுகள் எதுவானாலும்

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
PURE GHEE SWEETS

பாண்டி பஜார், சென்னை PH : 243 12345
அடையார், அண்ணா நகர், மயிலாப்பூர், அசோக் நகர்,
ஏர்போர்ட், வடபழனி, ஸ்பென்சர், புரசைவாக்கம்

கோவை பொள்ளாச்சி மேட்டுப்பாளையம் திருப்பூர் ஈரோடு
சேலம் கரூர் திருச்சி மதுரை பெங்களூர் ஹைதராபாத்



பதிவு எண் : TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05

